Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.*
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666


16 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்


நதி 16 | பாலம் 20 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | OCTOBER 15, 2006



தீபாவளி வாழ்த்துக்கள் 03



ஒக்னேக்கல் நீர்வீழ்ச்சி 09



நேர்காணல் ஜோன் மகேந்திரன் 15

# இரு நூலகங்கள்

வரலாற்று ரீதியாக நீண்டகாலமாக மேலைத்தேய நாடுகளிலும் கீழைத்தேய நாடுகளிலும் மன்னர்களாலும் அரசர்களாலும் பேணிப்பாதுகாத்து வளர்க்கப்பட்டு வந்த சமூக ஸ்தாபனங்களில் நூலகங்களும் ஒன்று. இந்த நூலகங்கள் ஒரு நாட்டின் அல்லது இனத்தின் அறிவுக் களஞ்சியமாக மட்டுமன்றி கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் அழகுப்பெட்டகங்களாகவும் விளங்குபவை. மேலும் அவற்றின் பழமையினையும் வரலாற்றுப் பெருமையினையும் உலகுக்கு எடுத்துக் காட்டும் கலங்கரை விளக்கமாகவும் விளங்குபவையாகும். குறிப்பாக அமெரிக்காவிலுள்ள அமெரிக்க காங்கிரஸ் நூலகம், பிரித்தானியாவிலுள்ள பொருட்காட்சி நூலகம் (British Museum) போன்ற பல மேலைத்தேய நாடுகளிலுள்ள நூலகங்கள் அந்தந்த நாடுகளின் நாகரிக மேம்பாட்டினையும் அறிவியல் முன்னேற்றத்தினையும் சான்று பகரும் சமூக ஸ்தாபனங்களாக மிளிர்கின்றது. அவ்வாறே இலங்கையில் ஈழத் தமிழ் மக்களின் கல்விப் பாரம்பரியத்தினையும் கலைகலாச்சார பண்பாட்டு விழுமியங்களையும் இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமின்றி அனைத்துலக மக்களுக்கும் எடுத்துக்காட்டும் ஒரு கலங்கரை விளக்கமாக ஒளி வீசிக் கொண்டிருந்தது யாழ்ப்பாணப் பொதுசனநூலகம். தென்கிழக்கு ஆசியாவிலேயே அதிசிறந்த நூலகங்களில் ஒன்று என்ற பெருமையுடனும் மிக அழகான நூலகம் என்ற பெருமிதத்துடனும் கம்பீரமாகக் காட்சியளித்த அந்த நூலகம் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இரவு அப்போது அமைச்சர்களாயிருந்த காமினி திசாநாயக்கா, சிறில் மத்தியூ ஆகியோர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க இனவாத நாசகார சக்திகளினால், தீக்கிரையாக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு இலட்சம் நூல்கள் எரிந்து சாம்பலாகிக் காற்றோடு காற்றாய் கலந்தன. 20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் நூலக வரலாற்றில் ஒரு கறை படிந்த சம்பவமாக இது விளங்கியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்திற்கென்றோ தனிவரலாறும் உருவாகத் தொடங்கியது. யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் தோற்றம், அது வளர்ந்த கதை தனத்துவம் மிக்கது மட்டுமன்றி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# அரசாங்கம் விரும்புவது போரையா? சமாதானத்தையா?

இலங்கையில் பல சகாப்தங்களாக நடைபெற்றும் வரும் அரசியல் யுத்தத்திற்கு ஓர் இறுதி தீர்வு காணுவதற்கான சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு நாள் குறிப்பிடப் பட்டுள்ளது. இம் மாதம் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் இனியும் இலங்கையில் போரா? சமாதானமா? என்ற கேள்விக்கு பதில் கிடைக்கப் போகின்றது.

இந்த சமாதான முயற்சியில் சர்வதேசமும் ஏதாவது ஒரு வகையில் பங்கு கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தமிழ் மக்களின் மீதான பாரிய இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு ஏவி விட்டு தமிழீழ விடுதலைப் புலிகளைப் போருக்கு வலிந்திழுக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

சமாதான சூழ்நிலையை சீர்குலைக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு இலங்கை அரசு செயல்படுகின்றது என்று தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகமும், கவலையும் தோன்றி யுள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர் களுக்கு எந்த ஓர் உரிமையையும் இலங்கை அரசு தரத்தயாராக இல்லை என்றே தமிழர்கள் நம்புகின்றார்கள்.

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும், அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது இலங்கை அரசினால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட நிலைமையாகும். இதனால் பல நோயாளிகளும், மக்களும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

நிலைமை இவ்வாறு இருக்க கடும் யுத்தத்தினால் மிகக் கொடுமையாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக செயலாற்றி வந்த வெளிநாட்டு மருத்துவ குழுக்கள் உட்பட பல தொண்டர் நிறுவனங்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது. குடா நாட்டு மக்களுக்கு அரசு உதவிப் பணிகள் மறுக்கப்பட்ட நிலையில், வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் உதவிகளும் மறுக்கப்பட்டுள்ளன.

இந்தமாதக் கடைசிப்பகுதியில் நடப்பதாக இருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முக்கிய காரணமாக இருப்பது நோர்வே. ஒஸ்லோவின்



இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் போவர் அவர்களின் இடைவிடாத முயற்சியே இதற்கு காரணமாக இருந்தது. பலமுறை முறிந்து போகக் கூடிய சூழ்நிலைகளில் இருந்து பேச்சு வார்த்தையை சேர்த்து வைத்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் தான் இந்த சமாதானப் பேச்சுவார்த்தை தொடருமா இல்லையா என்பது தெரியவரும்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
எமது ஆரோக்கியமானது (Health) மூன்று படிமுறைகளால் பராமரிக்கப்பட வேண்டியது. குழந்தைகள் முதல் முதியவர்கள்வரை இந்தப் படிமுறை களைப் பின்பற்றுவதன் மூலம் புற்றுநோய் (Cancer) இருதய நோய் (Heart Disease) உட்படப் பல நோய்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.
KG Master
(வாழ்வியல் ஆலாசகர்)
By Appointment only
Office: 416.291.2611 / Mobile: 416.725.5112

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"
HomeLife GTA Realty Inc., Brokerage *
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
* INDEPENDENTLY OWNED AND OPERATED

RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
1ST PRIZE
HomeLife/GTA Realty Inc. Brokerage*
Bus: 416-321-6969
#206 - 1711 McCowan Rd.,
Scarborough, ON.
*Independently owned and operated

வாழ்வு - வியாபாரம் - முதலீடு
HomeLife GTA Realty Inc., Brokerage *
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
* INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
* INDEPENDENTLY OWNED AND OPERATED

# ஈழத்தமிழர் போராட்டத்தின் சவால்களும் அதற்கு புலம் பெயர்ந்த தமிழரின் பொறுப்பும்

## ஈழத்தமிழர் போராட்டத்தின் பின்புலம்

ஈழத்தமிழரின் சுதந்திரம், உரிமை, வாழ்வியல் எதிர்காலம், தேசியம் போன்ற தனிமனித சமூக அவசியப்பாடுகள் இலங்கையில் சிங்கள அரசின் மேலாண்மைக்கு உள்ளாக்கப் பட்டு இருந்தது. ஓர் இனம் கொண்டிருக்க வேண்டிய அனைத்து சமூக மானுட கூறுகளையும் முறையாக கொண்டிருந்தும் அவ்வினத்தினை பல்வேறு வழிகளிலும் சிங்கள இனம் நசுக்கிக் கொண்டிருந்த போது தமிழ் இனத்தின் வாழ்வியலுக்கான போராட்டம் அவ்வினத்தின் மேல் புரையப்பட்ட விழுப்புண் களின் ஊடாக முகிழ்த்தது. அப்போராட்டம் பல்கூர்மை சார்ந்ததாயினும் தலைவர்களால் பொருத்தமற்ற சூழலில் எடுக்கப்பட்ட பொருத்தமற்ற கருத்தியல் அணுகுமுறைகளால் அப்போராட்ட முனைப்புகள் பலவற்றை இல்லாது ஒழித்தது. இருப்பினும் "யாருக்கும் அடிபணியாது போராடினால் அன்றி எமது உரிமை எமக்கு கிட்டாது" என்ற கோட்பாட்டில் உறுதியாக நின்ற புலிகளின் தலைமை இன்றுவரை ஈழத்தமிழரின் சுதந்திரத்திற்கு குருதி கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அத்தலைவன் பின்னால் ஒட்டு மொத்த தமிழ் இனம் அணிதிரண்டு சுதந்திரப்போரை நடத்திக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் சுதந்திரத்திற்கான போராட்டம் ஆயுதப்போராட்டம் ஒன்றினால் மட்டுமே பெறமுடியும் என்ற வாதம் முனைப்பு பெற்றது. இலங்கையின் சர்வதேச விமான நிலையத்தின் துல்லியற் தாக்குதல் வெற்றியை தமிழ் இனம் கண்ட போது சிங்களத்தின் இராணுவ மேலாண்மை மட்டுமல்ல இலங்கைப் பொருளாதாரமும் அதளபாதாளத்திற்கு சென்றது. இந்த நிலையில் தமிழர் பிரதிநிதிகளான புலிகள் நடத்தும் மாசற்ற சுதந்திர வேட்கையை பயங்கரவாதிகள் என்று கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கும் இந்த சொல்லை களைந்தெறிய வும், தமிழரின் போராட்ட அறவியலை உலகத்திற்கு உணர்த்தவும் இதனை ஒரு மக்கள் மயப்பட்ட போராட்டமாக முழுதளவில் மாற்றி வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்துடன் போராட்டம் நீண்ட தொன்றாக அமையக்கூடாது என்ற நோக்கும் சேர்ந்து சுதந்திரத்துக்கான போராட்டம் ஆயுதப்போராட்டம் ஒன்றினால் மட்டுமே பெற முடியும் என்றவாதம் முனைப்பு பெற்றிருந்தது. நோக்கம் தமிழரின் சுதந்திரம் என்ற வகையில் அதனை சமாதான செயற்பாட்டா லும் பெறமுடியும் என்ற வழி இருந்ததால் அதனை ஒரு கட்ட செயற்பாடாக தமிழர் அந்த வழியை தேர்ந்து எடுத்ததன் மூலம் தமிழர் கொடுத்த விலை என்பது மிக அதிகம். அந்த விலையின் தாக்கம் தமிழ் போராளிகளுக்குள் ளும் செல்வாக்கு செலுத்தியது என்பது மறுக்க முடியாத உண்மை. இவ்வாறான தெரிவின் மூலம் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சர்வதேசத்திற்கு சரிபாதியான பொறுப்புணர்வு இருந்தது. இதனால் தமிழர் சர்வதேசத்தின் கைகளை நம்பவேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் சர்வதேசமோ அவர்கள் கருத்துக்களை திணிப்பவர்களாகவும், புலிகள், அரசு சம பலத்தை ஏற்க மறுப்பவர்களாகவும், புலிகளை மேலும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்துபவர்களாகவும், தமிழ் மண்ணில் ஏற்படும் அவலங்களை கருத்தாக்கங்களோடு மட்டும் பேசுபவர்களாகவும் தங்களை அடையாளம் காட்டினர். எனவே இதற்கு தகுந்த நீதியை வழங்க முன்வராததால் உலகத்தவர்களாலும் தமிழ்மக்கள் இன்று புறக்கணிக்கப்பட்டதாக உணர்கின்றனர். இதற்கு தக்க சான்றாக பின்வரும் விடயங்களை குறிப்பிடலாம்.

- ரோக்கியோவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் புலிகளை அழையாமை
- ஐரோப்பிய ஒன்றியத்தின் புலிகள் மீதான தடை
- சுவிஸ் நாட்டில் இறுதிக்கட்ட பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்ட முடிவுகளை அரசு அமல்படுத்தாது சர்வதேசத்தையும் புலிகளையும் ஏமாற்றியதை பார்த்துக்கொண்டிருந்தது.
- எவ்வளவோ படுகொலைகள் தமிழ் மண்ணில் நிகழ்ந்திருந்தாலும் செஞ்சோலை படுகொலை யை செய்ததால் இன்று அரச பயங்கரவாதம் வெளிப்படையாகத் தெரிந்தும் இந்தியா வாய்மூடி மௌனியாக இருந்தது. ஏனைய நாடுகள் மிதவாதக் கண்டனங்களை வெளியிட்டமை.
- மாவிலாறு, சம்பூர், முகமாலை, வாகரை யுத்தங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளை கண்டிக்காமை
- யாழ்ப்பாண மக்களின் இயல்பு வாழ்க்கை இரண்டு மாதத்திற்கு மேலாக முடக்கியமையை கண்டிக்காமை
- துணை இராணுக் குழுக்களினால் நாளுக்கு நாள் மனித உயிர்கள் கொல்லப்படுவதை பார்த்து பேசாதிருப்பது
- தமிழர் தரப்பின் அரசியல் பிரதிநிதிகளை இந்தியா சந்திக்க தவறியமை.

இவை யாவுமே சர்வதேசம் சிங்களத்தின் பால் கைகோர்த்து நிற்பதாகவே தமிழர்களால் பார்க்கப்படுகின்றது. இருந்தாலும் புலிகளோ, தமிழர்களோ இன்றும் சர்வதேசத்தை நம்பியிருப்பதற்கான காரணம் உலக அளவில் இடம்பெற்ற சுதந்திரப் போராட்டங்கள் எவ்வாறு சர்வதேசத்தின் கண்களில் நீதியாக தெரிந்ததோ அதே அளவான பார்வை எமது போராட்டத்திலும் இன்று ஓரளவு தெரிய தொடங்கியிருப்பதும் அதன் ஊடாக தீர்வு தமிழ் ஈழத்தின் உட்கட்டுமான வெளிக்கட்டமானங்களை கட்டி எழுப்புவதில் பாரிய பங்களிப்புகளை தரும் என்பதனால் தான்.

## அரசும் துணை இராணுவக் குழுக்களும்

சிங்கள மேலாதிக்க வாதிகள் தமிழர்களுக்கு எதிரான ஒவ்வொரு நகர்வையும் மிகக் கச்சிதமாக நிறைவேற்றுகின்றனர். இதன் ஒருபகுதியை துணை இராணுவக் குழுக்களினூடாக நிறைவேற்றிக் கொண்டிருப்பது இன்று பாரிய சமூக அவலங்களை ஏற்படத்துகிறது. இதுமட்டுமல்லாமல் புலிகளின் எதிர்கால போரில் நவீன உத்திகளை விரைந்து தேடுவதற்கு தள்ளப்பட்டிருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மை. மற்றைய அரசின் நகர்வு சர்வதேச அளவில் அரசினால் மேற்கொள்ளப்படும் இராஜதந்திர செயற்பாடுகள் அதில் அவர்கள் வெற்றி பெற்றிருப்பது அமெரிக்காவில் புலிகளை சம்பந்தப்படுத்தி ஆயுதக்கொள்வனவு சார்ந்த கைதுகள் மூலம் தெரியவருகிறது. ஒரு தகவல் யுத்தத்தினை ஏற்படுத்தி சர்வதேச அளவில் முனைப்பு பெறக்கூடிய தமிழர் போராட்ட விழுதுகளுக்கு ஓர் அச்சுறுத்தல் ஏற்படுத்துவது இதன் நோக்கம்.

இந்த அச்சுறுத்தல் எதில் பிரதிபலிக்கின்றதெனில் செஞ்சோலை சிறுவர் படுகொலைக்கு எதிராக போராட்டம் மிகப்பாரிய அளவில் கனடா உட்பட அனைத்து புலம்பெயர் நாடுகளிலும் ஏற்பட்டது. அதன் பின்னர் இரணுவத்தின் அடாவடித்தனம் யாழ்ப்பாண குடாநாட்டு ஒட்டுமொத்த மக்களின் செயற்பாடுகளை ஒடுக்கி அங்கு நாளுக்குநாள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு எதிரான போராட்டங்கள் காத்திரமான முறையில் சர்வதேச அளவில் முன் எடுக்க படாமையை பிரதிபலிப்பதில் அந்த அச்சுறுத்தல் செல்வாக்கு செலுத்துகின்றது.

அடுத்த கட்டமாக இந்தியா தமிழர் பிரதிநிதிகளை சந்திக்க முடியாமல் போனதற்கும் அதேநேரம் மாற்றுக்கருத்தாளர் எனக்கூறிக் கொள்ளும் தமிழர் விரோதிகளை இந்தியாவின் தலைமை மற்றும் இணைத்தலைமைகள் கட்டம் கட்டமாக சந்திப்புக்களை மேற்கொண்டமையை சிங்கள அரசின் செல்வாக்கு எடுத்துக் காட்டுகின்றது.

மேலே குறிப்பிட்டது போல் இந்த துணை இராணுவக்குழுக்களை அரசு இயக்குவதன் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள மனித அவலத்தை நாம் நோக்கும் போது சில விடயங்கள் சிந்தனைக்கு வருகின்றன. அதாவது இன்றைய இந்த துணை இராணுவக் குழுக்கள் அரிய புத்திஜீவிகள் கொல்லப்படுவது, கடத்தப்படுவது, தமிழ் வர்த்தகர்ளுக்கு எதிரான பாரிய அச்சுறுத்தல், அவர்களிடம் பணம் பறிப்பது, பணம் தர மறுப்பதன் மூலம் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவது அல்லது சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவது போன்றவற்றை செய்கின்றன.

## நம்மூரான்

வவுனியாவில் வசிக்கும் ஒரு வர்த்தகருக்கு மட்டக்களப்பு பகுதியில் இருந்து தொலைபேசி அழைப்பு வருகின்றது. தொலைபேசியில் அழைத்தவர் தன்னை கருணா குழுவின் பிரதிநிதி என அறிமுகம் செய்கின்றார். 'உடனடியாக எமக்கு ரூபா 20 இலட்சம் தரப்படவேண்டும் அல்லாவிடில் உமது உயிர் பறிக்கப்படும்' என மிரட்டல் விடப்பட்டது. வர்த்தகர் அந்த மிரட்டலை சிந்தனைக்கு எடுக்காத பட்சத்தில் அவரின் வீட்டிற்கு அடுத்தடுத்த நாட்களில் குண்டு வீசப்படுகின்றது. அந்தப் பிரதிநிதி மீண்டும் அவரோடு தொடர்பு கொள்கின்றார். வர்த்தகரின் சார்பாக வீட்டின் பிரதிநிதி ஒருவர் உரையாடுகிறார். இவர்கள் இருவரும் பணக்குறைப்பு பற்றி பேசி ரூபா 12 இலட்சம் பணம் கைமாறப்படுகிறது. அதனை கொடுக்காத பட்சத்தில் தொடர்ந்து அவரது வீட்டிற்கும் உயிருக்கும் அச்சுறுத்தல் இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது. இப்படியான சம்பவங்களால் வர்த்தகர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேறிய வண்ணம் உள்ளனர். மேலும் மட்டக்களப்பு பிரதேசங்களில் சிறுவர்களை கடத்திச் செல்வதும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. போராட்டத்தின் செறிவைக் காட்டக்கூடிய தமிழ் ஊடகவியலாளர் கள் கொல்லப்படுவதும் தொடர்ந்தும் அச்சுறுத்தப்படுவ தும் இவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இவை அனைத்தும் இவர்கள் மூலம் அரசு நிறைவேற்றுவதன் நோக்கம் மிகப் பாரதூரமான ஒரு விடயம். அதாவது இவ்வாறான அச்சுறுத்தல்களை இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் ஈழத்தமிழர் போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றி அமைக்கக் கூடிய செயற்பாட்டு உந்தல்களை கேள்விக்குள்ளாக்கு கின்றன. இது அப்பகுதி மக்களின் இயல்புசார் வாழ்க்கையை நசுக்கி தமிழ் மக்களின் பிரதேசவாதம், சாதி போன்ற சமூக உட்கூறுகளின் ஊடாக மக்களை பிரிக்கின்றது. அத்துடன் கல்விசார் சமூகத்தின் எதிர்காலத்தை கேள்விக் குள்ளாக்குகிறது. மேலும் சமூக அசைவாக்கத்திற் குரிய மக்கள் பிரயாணம், மருத்துவ வசதிகள், அத்தியாவசிய உணவுத் தேவைகள் போன்றவற்றைத் தடுக்கிறது. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மக்களுக்கும் புலிகளுக்கும் இடையே ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தி அந்த மக்களின் பலவீனத்தை பார்த்துக் கொண்டிருக்கும் பார்வையாளர்களாக மாற்றுகிறது. தொடர்ந்தும் இந்த வெற்றிடத்தை பேணுவதன் மூலம் புலிகளை மக்கள் மயப்பட்ட நிலையில் இருந்து பலவீனப்படுத்துகிறது. அத்தோடு அடுத்தகட்ட இராணுவ முன் எடுப்புக்களை பல்வேறு வழிகளிலும் மேற் கொண்டு புலிகளுக்கு போர் என்ற தெரிவைக் கொடுத்து முழு அளவிலான போரினை ஏற்படுத்தி புலிகளை பலவீனப்படுத்த அல்லது ஒடுக்க அரசு முனைகிறது. புலிகளைப் பலவீனப்படுத்தும் செயற்பாட்டில் இந்தியா கூடிய அளவு திருப்தி அடைகின்றது. இந்த பலவீனத்தை பயன்படுத்தி இந்தியா மாற்றுக் கருத்தாளர்களின் ஊடாக தமிழர்களுக்கு தீர்வினை கொடுக்க முனைகின்றது.

எனவே இந்த துணை இராணுவக் குழுக்களைக் அடக்குவதன் மூலமும் மாற்றுக் கருத்தாளர்களை மக்களுக்கு அடையாளம் காட்டுவதன் மூலமும் தான் இலங்கை இராணுவத்தை புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

## புலம்யெர்ந்த தமிழர்களின் பாரிய பங்கு

புலம்பெயர் மக்களின் விழிப்புணர்வு போராட்டம் அதுவும் கனேடிய தமிழ் மக்களின் விழிப்புணர்வு போராட்டங்கள் கனேடிய மண்ணில் புலிகள் பயங்கரவாதிகள் என அறிவிக்கப்பட்ட பின்னரே காத்திரமாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் தமிழர்களின் நியாயமான போராட்டத்தின் கதறல் சில சர்வதேச அதிகார மையங்களை உலுக்கியதன் விளைவே இன்று அமெரிக்காவில் நடக்கும் கைதுகள் இவ்வாறான அச்சுறுத்தல் களின் 'மாயை' அல்லது 'போலித்தனம்' சீரிய முறையில் மக்களினால் அடையாளம் காணப்பட வேண்டும். அடையாளம் காணப்பட்டவர்களால் மக்களுக்கு விளக்கப்பட வேண்டும். எமது போராட்டம் மக்கள் மயப்பட்டது என்பதை சொல்வதற்கு இவ்வாறான அச்சுறுத்தல்கள் தடையக அமையக்கூடாது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் அந்த மக்களை எவ்வாறு விடுதலை என்ற உணர்வுப் பாதையில் ஒன்று சேர்கின்றார்களோ அதேபோல் புலம்பெயர் மக்களும் தொடர்ச்சியாக விடுதலை என்ற உணர்வால் ஒன்று சேர்க்கப்பட வேண்டும். கட்டம் கட்டமாக சுழற்சி முறையாக எமது போராட்டம் முன் எடுக்கப்பட வேண்டும். போராட்ட மையங்கள் நிறுவப்பட்டு அந்த போராட்ட மையங்களுக்கு எமது மக்களில் சீரிய சிந்தனையாளர்கள் அடையாளம் காணப்பட்ட அவர்கள் அனைவரையும் அதற்கென உள்வாங்கி மக்கள் போராட்டத்திற்கான பாதை போடப்பட வேண்டும். எங்கள் போராட்டத்தின் செறிவை எமது அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்ல வேண்டும். அந்த தலைமுறையின் அறிவுக் கண்களின் ஊடாக எமதி வெற்றிப்பாதை இடவேண்டும். ஒவ்வொரு புலம்பெயர் தமிழனும் எனக்கென்று ஒரு நாடு, எனக்கென்று ஒரு சமூகம், எமது இனத்திற்கான எதிர்காலம் பற்றி சிந்திப்பதற்கு தமிழ் ஊடகங்கள் காத்திரமான பங்களிப்பு செய்ய வேண்டும். இவை எல்லாவற்றையும் விட எமது படையின் கரம் பலப்படுத்த வேண்டும். ஒவ்வொரு தமிழனும் அதற்காக செயற்பாட்டால் ஒரு கணம் சிந்தியாது இறங்க வேண்டும். நாம் கனேடிய தமிழன் என்ற வகையில் ஒரு கனேடியப் பொதுமகனுக்கு உள்ள உரிமை எமக்கும் இந்த மண்ணில் உண்டு. அதைப் பயன்படுத்தி எமது மண்ணின் அவலம், இன அழிப்பு, தமிழ் உயிர்க்கொலை, சிறுவர் கொலை, வர்த்தகர் கடத்தல், பாடசாலைச் சிறார் கடத்தல், ஊடக சுதந்திரம் மறுக்கப்படல் இவை யாவற்றையும் உரத்து கூற ஒவ்வொரு தமிழனும் முன்வருவாராயின் எங்கள் தேசத்தின் குரல் வெகு தொலைவில் இல்லை.


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

- வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள...
- வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# புதிய அறிமுகம்

## வெங்கட் சாமிநாதன்

இன்று தமிழ் கூறு நல்லுலகம் உலகளாவியதாகியுள்ளது. பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை என்று அன்று கர்வமாகச் சொல்லிக்கொண்டார்கள். இன்று அந்த அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் இல்லை. அதனிடத்தில் இப்போது நாம் சொல்லிக்கொள்ளலாம், தமிழ் கூறு நல்லுலகில் சூரியன் அஸ்தமிப்பதில்லை என்று. இதில் எவ்வளவு தூரம் தமிழகத் தமிழர்கள் கர்வம் கொள்ளலாம் என்று எனக்குத் தெரியவில்லை. கர்வம் கொள்வதற்கு ஓரளவு சாத்தியமுண்டு எனில், அந்த ஓரளவைச் சாத்தியமாக்கியுள்ளது முதலில் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள். பின் அவர்களைத் தொடர்ந்து புலம் பெயர்ந்த தமிழகத் தமிழர்கள்.

வன்கூவரிலிருந்து கொரியா, ஜப்பான் வரை தமிழர்கள் பரவியுள்ளார்கள். இது சமீபத்திய நடப்பு. ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ் மக்கள் வயிற்றுப் பிழைப்புக்காக, பெரும்பாலும் தென் மாவட்டங்களிலிருந்து தன்னிச்சையாகவும், கங்காணிகளால் மந்தையாகத் திரட்டப்பட்டும் பிரிட்டிஸ் கயானாவிலிருந்து மலேயா சிங்கப்பூர் வரை கூலிவேலை செய்யக் கிளம்பினார்கள். அவர்கள் இன்றும் அந்நிலையிலேயேவா இருப்பார்கள்? அவர்களைத் தொடர்ந்து சென்ற தமிழ் பண்டிதர்களும் உண்டு. வியாபாரிகளும் உண்டு. கட்டிடக் கலைஞர்களும் உண்டு. இவர்கள் மட்டுமல்ல, அரசியல் வாதிகளும் சென்று வந்துள்ளார்கள் என்று லக்சுமி எழுதிய சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் பற்றிய புத்தகத்திலிருந்து தெரிந்து கொண்டேன். தமிழர்கள் எங்கு சென்றாலும், அங்கு முருகனும் மாரியம்மையும் எடுத்துச் செல்வார்கள். தீமிதி, காவடி செல்லும். ஆனால், அங்கு தமிழும் செல்லும் என்பது கொஞ்ச காலம் முன்வரை நிச்சயமில்லாதிருந்தது. கொலம்பியாவுக்கும், பிஜி தீவுகளுக்கும், தென் ஆபிரிக்காவுக்கும் தமிழ் சென்றதில்லை. ஏன் என்பது எனக்குப் புரிந்ததில்லை. இங்கும் நம்மவர் ஏன் என்று தமக்குள் கேட்டுக்கொண்டதுமில்லை.

ஆனால் மலேசியாவுக்கு தமிழ் பண்டிதர்கள் சென்றிருக்கிறார்கள். தமிழ் வளர்த்துள்ளார்கள். செய்யுள் நூல்கள் இயற்றியுள்ளார்கள். கு. அழகிரிசாமி அங்கு சென்று சிறு கதை வகுப்புகள் நடத்தியிருக்கிறார். ஒவ்வொரு ஆண்டும் என்று நினைக்கிறேன் இங்கிருந்து தமிழ் எழுத்தாளர்கள் இருவரோ என்னவோ, அழைக்கப்பட்டு, தரப்பட்ட கௌரவத்தை ஏற்று, அத்தோடு அங்கு தமிழின் புகழையும் தம் புகழையும் பரப்பி வந்துள்ளார்கள். கோவிந்த சாமி என்னும் கணினி அறிஞர் தமிழுக்கும் கணினிக்கும் இடையேயான உறவாடலை பெருமளவு சாத்தியப்படுத்தியுள்ளதாக சொல்கிறார்கள்.

இதையெல்லாம் பார்த்தால், இது பெருமளவு ஒரு வழிப்பாதையாகவே இருந்துள்ளதாகவே தெரிகிறது. அங்கிருந்து நாம் யாரையும் இங்கு அழைத்து கௌரவித்ததாகத் தெரியவில்லை. நாம் தான் விருந்து சாப்பிட்டு வருக்கிறோம். நாம் அவர்கள் யாருக்கும் விருந்தோம்பியதாகத் தெரியவில்லை.

அனேகமாக நாற்பது வருடங்களுக்கு முன், லக்சுமி கிருஸ்ணமூர்த்தி பெருங்கனவுகளோடு தொடங்கிய வாசகர் வட்டம் தன் தொடக்கத்திலேயே அக்கரை இலக்கியம் என்றொரு தொகுப்பை வெளியிட்டது. துரதிர்ஸ்டவசமாக, அவரது முயற்சிகள் வியாபார வெற்றியடையவில்லை. எனக்கும் அதைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியதில்லை. சில வருடங்களுக்கு முன் சென்னைக்கு வந்திருந்த மலேசிய அன்பர் பீர் முகம்மது தம் வேதனையை வெளியிட்டார். "நாங்கள் இங்குள்ள எழுத்துக்களை எங்கள் ஊருக்கு எடுத்துச் செல்கிறோம். ஆனால், எங்களை, எங்கள் எழுத்துக்களை நீங்கள் இங்கு வரவேற்பதாகத் தெரியவில்லை" என்று. அவர் வெளியிட்ட வேதனையை நான் என் வாசகங்களில் சொல்லியிருக்கிறேன்.

நியாயமான புகார் தான். நாம் அப்படித்தான் நடந்து கொள்கிறோம். நமக்கு அப்படி ஒரு மனஅமைப்பு. அறுபதுகளில் என்று நினைக்கிறேன். இங்கிருந்து இலங்கை சென்ற இரு தமிழ் எழுத்தாளர்கள் "ஈழத்து இலக்கியம் தமிழக இலக்கியத்திற்கு இருபது வருடங்கள் பின் தங்கியிருக்கிறதே, என் செய்ய?" என்றோ என்னவோ சொல்லப்போக, நாம் வாங்கிக் கட்டிக்கொண்டோம். இன்று சரி, சற்று முன், கனடாவிலும், ஐரோப்பாவிலும் இருக்கும் ஈழத்தமிழர்கள் தாம் புலம் பெயர்ந்த இடத்திலும் தமிழை முன்னெடுத்துச் செல்லும் பாங்கைச் சுட்டி, "தமிழ் நாட்டிலேயே தமிழ் கற்காத நீங்கள் எங்களுடன் வந்து சேர எத்தனை காலம் எடுக்கும்?" என்று கேட்டால் என்ன சொல்ல இருக்கிறது நம்மிடம்?

ஆக, இப்படியெல்லாம் கட்டமைத்துக் கொண்டுள்ள நம் மன அமைப்பைச் சற்றுத் தளர்த்தி, நம் பின் சுழல்வதாக நாம் நினைக்கும் ஒளிவட்டத்தைச் சற்று மறந்து, நம்மவர்கள் சென்றவிடத்தில் என்ன செய்கிறார்கள் என்று நாமே முன் வந்து அறிந்து கொள்ளவும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளவும் முயலவேண்டும். (ஒரு விடயம் நமக்குள். நாம் நடத்தும் ராமாயண நாடகத்தை விட பாலி தீவுகளில் முஸ்லீம்கள் நடத்தும் ராமாயண நடன நாடகம் சிறப்பானதாக எனக்குத் தோன்றுகிறது. அதள பாதாளத்தில் இருக்கும் நம்மூர் தோல்பாவைக்கூத்தை விட பல மடங்கு சிறப்பானது, கலாபூர்வமானது, இந்தோனேசிய முஸ்லீம்கள் நடத்தும் ராமாயண பாவைக்கூத்து. இவையெல்லாம் என் சொந்த அபிப்ராயங்கள்)

அந்த சின்ன நாடாகிவிட்ட சிங்கப்பூரில், ஆங்கிலத்தில் நாடகங்கள் எழுதி மேடையேற்றும் இளங்கோவன் அரசின் தடையையும் சக எழுத்தாளர் சமூகத்தின் விரோத பாவத்தையும் பொருட்படுத்தாது தனித்து நிற்கும் தீரம் நமக்கு வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. அதே போலத்தான் எந்த தாக்ஸண்யமுமின்றி தன் கருத்துக்களைத் தயங்காமல் வெளியிடும் லக்சுமி அவர்களும். தமிழ் நாட்டில் அவர்கள் தாக்குப் பிடிக்கமுடியாது என்பது வேறு விடயம். இந்த உறவாடல் நமக்கு வேண்டும். நமக்குத் தெரியவாவது வேண்டும்.

சிங்கப்பூர், மலேசியாவில் உள்ள தமிழர் வாழ்க்கையின் சித்திரம் நமக்குத் தெரியாது. தமிழ் அங்கு அரசு மொழியாக உள்ளது. தமிழ் வாழ்கிறது. சரி. தமிழை மட்டுமல்லாமல் தமிழ் வாழ்க்கையில் அனேக அம்சங்கள் அவர்கள் உடன் வாழும் என்று நாம் நினைப்போம். ஆனால், அவர்கள் வாழ்வது மலேசியர்கள், சீனர்கள் பெருவாரியாக வாழும் இடத்தில் நெருங்கி வாழ்கிறார்கள். அந்த பாதிப்புகள் கட்டாயம் இருக்கும். அந்த பாதிப்பும், சித்திரமும் மிகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கும். நாம் தெரிந்து கொள்ளவும் வேண்டும். கட்டாயம் அவர்கள் தமிழில் சீனமும், மலாயும் கலந்திருக்கும். அவர்கள் உணவுகளும் சில பழக்க வழக்கங்களும் மாறியிருக்கும். பொது வாழ்க்கை நிரம்ப மாறியிருக்கும் அங்குள்ள கட்டுப்பாடுகளால். வாழ்க்கைப் பார்வையிலும் அதன் நிழல் படிந்திருக்கும். என்னையறியாமல் என் பேச்சில் கலந்து வரும் "அச்சா" வைக் கேட்கும் அறிமுகமில்லாதவர்கள் கூட "அய்யா வடக்கேயிருந்து வந்திருக்காப்பல" என்பார்கள். ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் என்று கேட்டால் பின் அவர்கள் விளக்கம் வரும். அப்படித்தான் என் "அச்சா"வை நான் கேட்காது தெரிந்து கொண்டேன். நம்மை யறியாது மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். மண உறவுகள் கட்டாயம் நிகழ்ந்து கொண்டிருக்கும். பொ. கருணாமூர்த்தி, கலாமோகன், சோபா சக்தி, சேரன், திருமாவளவன், போன்றோர் எழுத்துக்களில் ஐரோப்பிய சமூகத்தினிடையே வாழும் அவஸ்தைகள் பதிவாகியுள்ளதைக் காணலாம். ஆக, இவையெல்லாம் சேர்ந்து, ஆங்கிலமே ஆனாலும், அமெரிக்க இலக்கியத்திற்கும் ஆஸ்திரேலிய இலக்கியத்திற்கும் அவற்றிற்கேயான தனித்தனி முகங்களும், அடையாளங்களும் மணங்களும் இருப்பது போல, புலம் பெயர்ந்த நாட்டின் உறவாடலில் பிறந்த தமிழும் தனித்த அடையாளங்கள் பெற்றிருக்கும் தானே. இவையெல்லாம் தமிழுக்கு வளம் சேர்க்கும். தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும்.



# அகவிளக்கு ஏற்றுங்கள் ஆனந்தம் பெருகும்

## நா. க. சிவராமலிங்கம்

தீபங்களின் வரிசை தீப ஆவலி எனப்படும். ஒளி இருளை அகற்றி மகிழ்ச்சியையும் இன்பத்தையும் ஏற்படுத்து கின்றது. புற இருள் அகல்வது போல் அக இருளான அகந்தையும் அகலவேண்டும். அப்பொழுது தான் பரமானந்தம் ஏற்படும். தீபங்களின் வரிசை புற இருளை அகற்றுவதுடன் அக இருளையும் விலகச் செய்வதாகவும் பொருள் கொள்ளப்படும். நரகாசுரன் வதம் செய்யப்பட்டு அவனது கெட்ட குணமும் எண்ணங்களும் மறைந்து நல்ல குணமும் காருண்ணியமும் தோன்றியது போன்று நமது மனமும் சாத்தானின் இருப்பிடமாக இல்லாமல் சாத்வீகம் பொங்குதற்கு இத்தினத்தில் பிரார்த்திப்போம். நரகாசுரன் அட்டகாசமானவன். எனவே தான் இத்தினத்தில் பட்டாசு கொழுத்திக் கொண்டாடுகின்றோம் போலும். புத்தாடை, விதம் விதமான தின்பண்டங்கள் இத்தினத்தின் சிறப்பம்சமாகும். எனவே ஏழை மக்கள் வருடத்தில் ஒருமுறையாவது புத்தாடை புனைவதற்கு தீபாவலிப்பண்டிகை சந்தர்ப்பமளிக் கின்றது. பழங்காலம் தொட்டே இந்துக்களின் வாழ்வியலோடு இரண்டறக் கலந்துள்ள பண்டிகை இதுவாகும்.

ஐப்பசி மாதத்தில் சூரியன் துலாராசியில் நுழையும் போது திரயோதசி இரவு சதுர்த்தசி அதிகாலையில் இப்பண்டிகை கொண்டாடப்படுகின்றது. இச்சதுர்த்தசி நரக சதுர்த்தசி எனப்படுகின்றது. அன்றைய தினத்தில் அதிகாலையில் எண்ணை முழுக்காடி புத்தாடை உடுத்து ஸ்ரீமகாலட்சுமியை வழிபட்டு வாசலிலும் இல்லத்திலும் தீபங்களை ஏற்றிவைக்கின்றோம். இப்படிச் செய்வதால் நமது இல்லத்தில் ஸ்ரீலக்ஷ்மி நிரந்தர வாசம் செய்வாள் என்று விஷ்ணு புராணம் கூறுகின்றது. கங்காதேவி அன்றைய தினம் எல்லா நீர் நிலைகளிலும் ஆவாகானமாகி விடுகின்றாளாம். எண்ணை லக்ஷ்மியைக் குறிக்கும். எனவே எண்ணையில் லக்ஷ்மி வசிப்பதாகவும் வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணம் கூறும். எனவே தீபாவலி எண்ணை முழுக்கு கங்காஸ்ஞானம் எனப்படும். வீட்டிற்கு வருபவர்களை கங்காஸ்ஞானம் ஆயிற்றா என்று கேட்பர். நரகாசுரனின் இறுதி வேண்டுகோளுக்கு ஏற்பவே தீபாவலி கொண்டாடப்படுகின்றது என்பது ஐதீகம். இத்தினம் நரகாசுரனுக்காகவே கொண்டாடப ்பட்டாலும் நாம் அவனையோ, கிருஷ்ணனையோ, சத்தியபாமா நினைப்பதில்லை. குடும்பத்தில் எல்லோரும் ஒன்றுகூடி எண்ணை முழுக்காடி புத்தாடை உடுத்தி இனிப்புப்பண்டங்கள் சாப்பிட்டு மத்தாப்புக் கொழுத்தி மகிழ்கின்றோம்.

மகாபலிச் சக்கரவர்த்தியிடமிருந்த தங்களைக் காப்பாற்றும்படி தேவர்கள் வேண்ட மகா விஷ்ணு வாமன அவதாரம் எடுத்து அவனிடம் மூன்றடி மண் கேட்டார். இரண்டு கால்களாலும் மூன்று உலகங்களையும் அளந்தபின் மூன்றாவது அடியை மகாபலியின் சிரத்திலே வைத்து அழுத்தி அவரை பாதாள உலகிற்கு அனுப்பி ஆட்கொண்டார். ஐப்பசி மாதத்து திரயோதசி தினத்தன்று விஷ்ணு வாமன அவதாரம் எடுத்தார். அப்போது மகாபலி தான் ஆண்ட உலகங்களை அவருக்குத் தானமாகக் கொடுத்து சதுர்த்தசியன்று இரவின் முடிவில் மக்கள் எண்ணெய் தேய்ந்து ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்து ஆனந்தமாக கொண்டாட வேண்டுமென்றும் வீடு முழுவதும் தீபங்களேற்றி, ஒளிபரவச் செய்து இருளகற்ற வேண்டுமென்றும் வரம் கோரினான். நாராயணனும் மகாபலிக்கு அவ்வரத்தைக் கொடுத்தார். அத்தினமே தீபாவலித் திருநாளாகும். இது தீபவாலி பற்றிய ஒரு கதை.



பதிநான்காண்டுகள் வனவாசம் முடிந்து இராமபிரான் அயோத்திக்கு திரும்பிய போது மக்கள் அவரவர் இல்லங்களில் தீபங்களேற்றி புத்தாடை உடுத்து ஆனந்தமாக வரவேற்புக் கொடுத்தனர். இத்தினமே தீபாவலியாயிற்று என ஆன்மீகப் பெரியவர்கள் கூறுவர். இது தீபாவலி பற்றிய மற்றொரு கதை.

பாற்கடலைக்கடைந்தபோது தோன்றிய பொருட்களுடன் மகாலட்சுமியும் மூதேவியும் தோன்றினார்கள். மகாலட்சுமி விஷ்ணுவை மணந்து கொள்ள ஆசைப்பட்டார். ஆனால் மூதேவி மூத்தவளான தன் கல்யாணத்திற்குப் பின்னர் தான் லக்ஷ்மி விஷ்ணுவை மணக்கலாம் என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். மூதேவியை யாரும் மணஞ்செய்ய முன்வராத போது உத்தாலகன் என்ற ரிஷி தானாகவே முன்வந்து தன் தவவலிமையால் மூதேவியின் தீய செயல்களெல்லாவற்றையும் அகற்றி விடுவதாகக் கூறி அவளை மணந்து கொண்ட திருமாலே சரித்திரப்படி மூதேவியை உத்தாலகருக்கு திருமணம் செய்து வைத்தாராம். பின்பு தான் மகாலட்சுமிக்கும் மகாவிஷ்ணுவிற்கும் திருமணம் நடந்ததாம். அந்த நாளே தீபாவலித் திருநாளாகும். இது தீபாவலி பற்றிய வேறொரு கதை. இத்திருநாளிலே தமது அக இருள் அகன்றுவிட வேண்டுமென்றும் மன அழுக்கு இல்லாமல் போக வேண்டும்மென்றும் தான் நமது முன்னோர் இக்கொண்டாட்டத்தைக் கொண்டாடினர். நரகாசுரன் கண்ணணால் ஆட்கொள்ளப்பட்ட போது தன்னைப் போல் எல்லோரும் கண்ணனின் அருளுக்கு ஆட்பட வேண்டுமென்று தான் கருதினான். ஆனால் நம்மில் பலர் அன்றைய தினம் மது அருந்தி மாமிசம் புசித்து அசுரர்களாவே மாறி விடுகிறார்கள். அந்த நிலைமாறி அகத்தில் விளக்கேற்றுவோமாக. ஊரெங்கும் மணக்கும் ஆனந்தம் ஏதிலிகளுக்கும் கிட்ட எம்மாலான உதவிகளைச் செய்வோமாக.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# ஆயுட் காப்புறுதியில் இருந்து நட்டஈடு பெறுதல்

### "நட்ட ஈடு கோரும் விண்ணப்பம்" (Deat Claim Claiment " Statement")

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் இருந்து உயிர் இழப்பு ஏற்பட்ட பின்பு நட்டஈடு கோரும் உரித்துடையவர் சமர்ப்பிக்க வேண்டிய மிக முக்கியமான பத்திரமே "மரண அத்தாட்சி பத்திரம்" (Death Certificate) ஆகும். இப்பத்திரத்துடன் நட்டஈட்டினை பெற உரித்துடையவர் கேட்கப்படும் கேள்விகள் யாவற்றுக்கும் பூரணமான தகவல்களை வழங்கி நிரப்பும் பத்திரமே ஆங்கிலத்தில் (Death Claim Claimants Statement) என அழைக்கப்படும்.

இக்குறிப்பிடப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூரணப்படுத்தி நட்டஈட்டினை பெற உரித்துடையவர் எவர் என்பது (Primary Beneficiary) ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டு, மரணமானவருக்கும் இவருக்கும் என்ன உறவு என்பதும் குறிப்பிடப்பட்டு இருக்கும். இதில் ஒன்றுக்கு மேற்பட்டோரின் பெயர் குறிப்பிடப்பட்டு இருந்தால் பூரணப்படுத்தி அதனை கையெழுத்துடன் அத்தாட்சிபடுத்தும் போதே நட்டஈட்டினை பெற்றுக்கொள்ள முடியும். ஒன்றுக்குமேற்பட்ட பலர் இவ்வாறு நட்டஈட்டினை பெறும்போது எவ்வளவு விகிதாசாரத்தில் நட்டஈட்டினை பெற உரித்துடையவர் என ஒப்பந்தத்தில் ஏற்கனவே குறிப்பிட்டு இருந்தால் அதே விகிதாசாரத்தில் நட்டஈடு பகிர்ந்து வழங்கப்படும். இவ்வாறு எதுவும் குறிப்பிடாது ஒன்றுக்கு மேற்பட்டோரின் பெயர் மட்டும் குறிப்பிட்டு இருந்தால் சமமாகவே நட்டஈடு பிரித்து வழங்கப்படும்.

சிலநேரம் துர்அதிஷ்டவசமாக பணம்பெற உரித்துடையவர் (Primary Beneficiary) நட்டஈடு கோரும் நேரம் உயிருடன் இல்லையெனில் ஒப்பந்தத்தில் அடுத்த வரிசையில் நட்டஈடு பெறுபவர் (Contingent Beneficiary) என எவராவது குறிப்பிடப்பட்டிருந்தால், இந்நபர் நட்டஈட்டினை பெற உரித்துடையவர் ஆவார்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


இங்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் இருந்து நட்டஈட்டினை பெற உரித்துடையவர் விண்ணப்பத்தில் பின்வரும் கேள்விகளுக்கு சரியான தகவல்களை பூரணமாக வழங்குதல் வேண்டும்.

- ஆயுள் காப்புறுதி ஒப்பந்த இலக்கம் (ஆயுள்காப்புறுதி ஒப்பந்த இலக்கத்தினையோ அல்லது எந்தக்கம்பனியில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருக்கப்பட்டுள்ளது போன்ற விவரங்கள் சில நேரங்களில் தவறவிட்டால் அதுபற்றி கவலைபட தேவையில்லை. அதனை தேடிகண்டு பிடித்துத்தர என ஓர் அரசநிறுவனமே உள்ளது.)

- மரணமாகியவரின்

1. பெயர்
2. வதிவிட விலாசம்
3. தொழில்
4. பிறந்ததிகதி, பிறந்த இடம்
5. மரணமாகிய திகதி, மரணமான இடம்
6. மரணத்திற்கான காரணம்

- மரணமாகியவர் மரணத்திற்கு கிட்டிய காலங்களில் புகைப்பவரா?
கடந்த காலங்களில் எப்போதாவது புகைத்தவரா? புகைத்தலில் இருந்து விடுபட்டு இருந்தால் எப்போது விடுபட்டிருந்தார்?.
(இக்கேள்வி எல்லா காப்புறுதி கம்பனியும் கேட்பதில்லை)

- கடந்த ஐந்து வருட காலத்தில் மரணமாகியவருக்கு சிகிச்சை செய்த மருத்துவர்கள், மருத்துவமனைகள் பற்றிய விவரங்கள், முகவரிகள்.

- நட்டஈடு கோருபவரின்


1. முழுப்பெயர்
2. சமூகக்காப்புறுதி அட்டை இலக்கம்
3. முகவரி
4. மரணமானவருடன் உள்ள உறவுமுறை

நட்டஈடு கோருபவர் பதினெட்டு வயதுக்கு உட்பட்டவராக இருந்தால் நேரடியாக அவருக்கு நட்டஈட்டு காசோலை வழங்கப்படமாட்டாது. "நம்பிக்கை நிதியத்துக்குரியவர்" (Trustee) ஏற்கனவே ஒப்பந்தில் நியமிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். இல்லையேல் பதினெட்டு வயது வந்த பின்பு குறிப்பிட்ட வட்டியுடன் நட்டஈட்டினை பெற்றுகொள்ள முடியும். நட்டஈட்டு பணத்தினை எவ்வாறு பெற்றுக் கொள்ளவிருப்பம்?

1. Paid in lump sum
2. Wants to purchase other company's product?
3. Transferred to another

மரணம் ஆகியவருக்கு வேறும் ஏதாவது காப்புறுதி ஒப்பந்தம் இருந்தால் அதுபற்றிய விவரங்கள்.


இப்பத்திரம் கனடாவுக்கு வெளியே ஏனைய நாடு ஒன்றில் இருந்து சமர்ப்பிக்கும் போது இப்பத்திரத்தில் கனடாவின் அல்லது பிரித்தானியாவின் தூதராலயப் பிரதிநிதி, அல்லது நொத்தாரிஸ் (Notary Public) அல்லது ஒரு நீதிபதி இவ்விண்ணப்பத்தினை அத்தாட்சி படுத்தியிருத்தல் வேண்டும்.





A.V.M.
COOKING CLASSES
உணவுத் தயாரிப்பு முறைகளும் (புரியாணி வகைகள் உட்பட) கேக் தயாரிப்பு முறை களும், அலங்கரிப்பும் (ஐசிங்) டோல் மேக்கிங், தலை அலங்காரம் என்பனவும் குறைந்த செலவில் நிறைவாக கற்பிக்கப்படும்.
அழையுங்கள் : Ahi - 416.299.6053


SMILE
• BUSINESS PLANS • ACCOUNTING, TAXATION
• CORPORATE TAX PREPARATION OF FILING • SYSTEMS - POINT OF SALES
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
RK CONSULTANTS
PL. CALL: 905.887.7457 / 905.751.7537
24 hrs, 365 days


YARL WINDOW
BLINDS & DRAPERY
BLINDS DRAPERIES AND SHUTTERS
• Venetian Blinds • Pleated Shades
• Vertical Blinds • Cellular Shades
• Roller Shades
FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்
விவரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

BREAD MASTER BAKERY
புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வெதுப்பகம் செப்ரெம்பர் நடுப்பகுதியில் இருந்து பல்வேறு வகையான உணவுத் தயாரிப்புக்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.

• ரொட்டி வகைகள்
• புரியாணி வகைகள்
• புட்டு வகைகள்
• மரக்கறிச் சாப்பாடு
• சிக்கின், மட்டன் சாப்பாடு
• இடியப்பம்
• நூடில்ஸ்
ஓடர்கள் (Order) ஏற்றுக்கொள்ளப்படும்
மற்றும் சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்
கடை திறக்கும் நேரம்
காலை 6:00 மணி முதல்
இரவு 10:00 வரை

உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள்
416.299.5083
31 Tapscott Rd. B3, Scarborough
Malvern Area

# கீரிமலை – வழங்கிவந்த வரலாறு

## கடந்த இதழ் தொடர்ச்சி

கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன் துறை முதலிய இடங்கள் பற்றிய வரலாறுகளைத் தேட விழைந்தபோது வசாவிளான் திரு. க. வேலுப்பிள்ளை அவர்களின் "யாழ்ப்பாண வைபவ கௌமுதி" எனும் நூலே குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் கிடைத்தது. தொடர்ந்து இராசநாயக முதலியாரின் யாழ்ப்பாண வரலாறு போன்றவை கருத்தில் எட்டினும் 'கௌமுதி' பல நூல்களை ஆராய்ந்து தகவல்களைத் தந்திருப்பதைக் கண்டோம். யாழ்ப்பாண வைபவமாலை, வையா பாடல், கைலாசமாலை, வடமொழி நூல்கள் ஆதியன ஒரு சிலவாம். அவற்றோடு அண்மையில் வெளிவந்த முனைவர் இ. பாலசுந்தரம் அவர்கள் இடப்பெயராய்வு நூலும் வந்துள்ளது.

பெயராய்வின் முன், நின்றுநிலவி வரும் புராண இதிகாச சம்பவங்களை நோக்குவதும் நன்று. நம்புவதும் நம்பாததும் நம் மனோநிலையை பொறுத்தது. ஆயினும் மிகப்புகழ்வாய்ந்த நீரூற்று என்பது தெள்ளத் தெளிவாகின்றது. கீரிமலைக்குன்று அல்லது மேட்டின் மேற்குப்புறச் சாரலில் தற்போதைய கேணிகளும் நகுலேஸ்வரம் கோவிலும் காணப்படுகின்றன. கிழக்குப்புறச் சாரலில் காலங்குறிக்க முடியாத கதிரையாண்டவர் கோவில் (வைத்தியசாலையின் மேற்கு எல்லையில்) உள்ளது. தெற்கில் பருத்தித் துறை கீரிமலைப் பிரதான தெரு ஊடறுத்தும் வடக்கே பாக்குநீரிணைக் கடலும் உள்ளன.

நாமறிந்த காலத்தில் கோவிலோடு பூசகரின் இல்லங்களும், சைவக்குருக்களின் இல்லங்களும், மடங்களும் இருந்தன. அதற்கு அப்பால் கிட்டத்தட்ட முக்கால் மைல் சுற்றளவுக்கு எந்தக் குடிமனையும் இருந்ததில்லை. சிறுபற்றைக் கலட்டிகள் தான் இருந்தன. வரலாற்று அறிவு இல்லாத ஒருவர் கீரிகள் நிறைந்த பற்றைக்காடுகள் இருந்தமையால் கீரிமலை எனப்பெயர் பெற்றதென்றார். இது எமது வாழ்நாளை மாத்திரம் வைத்துக் கொண்டு சொல்லும் அபத்தமான கூற்றாகும்.

"எதற்கும் ஒரு புராணக்கதையுண்டு. அதை நம்ப வேண்டிய அவசியமில்லை. எனினும் பூர்வகாலத்திலே சிவபெருமான் பார்வதிசமேதராய் வந்து திருத்தம்பலேஸ்வரம் என்றழைக்கப்பட்ட பிரதேசத்தில் தங்கினார் எனவும், உமையவள் நீராடுவதற்காக கண்டகி தீர்த்தத்தை இவ்விடம் வரவழைத்தார் என்பதும் பின்னர் தேவர்களும், ரிஷிகளும் நீராடிப் புண்ணியவான்களான படியால் புண்ணியபுரம் என அழைக்கப்பட்டது.

அக்காலத்தில் திருத்தம்பலேஸ்வரம், திருத்தம்பலேஸ்வரி, கதிரையாண்டவர் கோவில்கள் கட்டப்பட்டதான கதை இராம இராவண யுத்தத்தின் பின்னர் இராமராகிய இந்நீரூற்றில் நீராடியபின் இராமேஸ்வரம் சென்றனர் என்பதும், இராவணனின் வீணையைத் தான் வாசிக்க விரும்பியிருந்த சித்திராங்கன் எனும் காந்தர்வன் இராவண சம்ஹாரத்தின்பின் அவ்வீணையை கையாடிவந்து இவ்விடத்திலிருந்து கானமழை பொழிந்தான் என்றும் அதனால் அவ்விடம் வீணாகானபுரம் எனவும் அவன் காடு அழித்து நாடாக்கினான் என்பதால் காந்தர்வ நகரம் எனவும் அழைக்கப்பட்டு, அப்பெயர்கள் குடாநாட்டுக்கே வழங்கப்பட்டு வந்ததெனவும் கூறப்படுகின்றது.

அயற்தேசங்களிலிருந்தும் பலரும் வந்து நீராடி நோய் தீர்ந்தும் பாவவிமோசனம் பெற்றும் போயிருந்தார்களாம். அப்படிப்பட்டவர்களுள் முசுகுந்தச் சக்கரவர்த்தி, துவாபர யுகத்தல் நிடத நாட்டரசனான நளமகாராசன், பஞ்சபாண்டவருள் ஒருவரான அருச்சுனன் (மணிப்புரம் வந்து இளவரசியை விவாகம் செய்தான் என்பது இவ்விடம் தான் என சொல்லப்படுகிறது.) முதலியோரும் சிலர் என இதிகாசங்கள் கூறும்.

பிற்காலத்தில கோணேசர் ஆலயத்தைப் புதுப்பிக்க வந்த குளக்கோட்டன் மகாராஜாவும் இவ்விடத்திலே அரசாண்ட மகாராணியின் வேண்டுகோட்படி இந்நீரூற்றில் நீராடி விருந்தயர்ந்து சென்றான்.

பிற்காலத்தில் அரேபிய யாத்திரீகரான இபன் பற்றூறா (1341) இவ்விடத்தை ஓர் அரசி ஆண்டதாகவும் தனது நீண்டகால நோய்க்கு அரசியின் ஆணைப்படி வைத்தியர்கள் மருந்து தந்து பூரண குணமடைந்ததாகவும் அவள் கொடுத்த விலையுயர்ந்த பரிசுகளோடு பிரயாணம் செய்தபோது கோட்டை எனும் ஊரில் கொள்ளையர்கள் எல்லாவற்றையும் பறித்து விட்டதாகவும் எழுதியுள்ளார். ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்திலும் (கி.பி. 950 தொடக்கம்) ஆங்காங்கே கீரிமலையில் வழிபட்டதான சம்பவங்கள் காணப்படுகின்றன.

மெல்ல மெல்லக் கழன்று சுத்தமாகி விடுமோ. சிறு பொறியுமில்லாமல் கதை புனைய முடியுமா? என காரண காரியத்தொடர்பை அறியும் முயற்சி தொடங்கியது.

எங்கள் பிரதேசங்களின் சரியான வரலாற்றை அறியும் ஆவல் எத்தனையோ நூல்களை வாசிக்க வைத்தது. சமஸ்கிருத ஏடுகளை வாசிக்க முடியவல்லை. எமது உறவினர்களான தசம் என அழைக்கப்படும் த. சண்முகசுந்தரம், வித்துவான் க. சச்சிதானந் தன் அவர்களோடு கலந்துரையாடினோம்.

குன்ம நோய் எனச் சிலர் எழுதினார்கள். அதை அவர்களும் ஏற்கவில்லை. குன்மம் என்பது வயிற்றோடும், குடலோடும் சம்பந்தப்பட்டது. பல வைத்தியர்களும் அவ்வண்ணமே கூறினார்கள். எனவே குன்ம நோய் எனில் அருவி நீரைக் குடிக்க அல்லவா வேண்டும். முதுகெலும்பு உயர்ந்து தாடை எலும்பு முன்னோக்கி வளர்வது என்றார் இன்னுமொருவர். அதுவும் சாத்தியமல்ல.

காலில் சிரங்கு வந்தால் அல்லது காலுளைவு வந்தால் மக்கள் முழங்காலளவு கடல் நீரில் நிற்பதைக் காண்கின்றோம். ஆகையால் இது ஒரு சரும வியாதிய் இருக்க வேண்டும் எனும் முடிவு கலந்துரையாடலில்

**கீரிமலை : கீரிமுகம் குதிரைமுகம் என்பன ஒரு நோயே தவிர மிருகங்களின் முகங்களல்ல. நோய் எது என்பதன் முரண்பாடுகளும் அதன் தீர்வான கருதுகோள் ஒன்றும் இங்கே முன்வைக்கப்படுகின்றன.**

## ஓர் ஆய்வுக்கண்ணோட்டத்துடன் கூடிய வரலாறு

கீரிமுகம் என்பது ஒரு நோய் என்றே வரலாற்றாசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். நாவலர் பெருமானும் அப்படியே பாலபாடத்தில் எழுதியுள்ளார். ஆனால் சாதாரணமாக கீரிமுகம், குதிரைமுகம் என்பன மனிதமுகமாக மாறிற்று என்பனவே எமக்கு சொல்லப்பட்டது. ஆசிரியர்களும் அப்படியே சொல்லித் தந்தார்கள்.

**– குறமகள் –**

சிறுவயதில் உண்மை என நம்பிய விடயங்கள், இளவயதில் அதெல்லாம் ஒரே பொய்யும் புரட்டும் புராணமும் என நகையாட வைக்கும். அனுபங்களும் அறிவும் வளர வளர பொய்யாயும் இருக்கலாம் மெய்யாயும் இருக்கலாம், சரியான ஆய்வாராய்ச்சி தேவை என ஆகிவிடும்.

கீரிமுகமும் குதிரை முகமும் யாரும் சபித்ததனால் வந்திருக்கலாம். பின் அருவியில் முக்குளித்தெழும்ப மனிதமுகம் வந்திருக்கலாம் என நம்பியது சிறுபிள்ளைக் காலம். புராணங்களே பொய், கற்பனைக்கதை எனத்தூக்கி எறிந்துதது இளரத்தம். சில பெண்களின் முகத்தில் ரோமங்களைக் கண்ட போது இப்படித்தான் நீண்ட ரோமங்கள் வளர்ந்து குரங்கு குதிரை போலக் காட்சி தந்திருக்குமோ? அருவியில் நீராட அவை

பெறப்பட்டது.

மேல்நாட்டுத் தொடர்புகளால் அழிந்தவை சிதைந்தவை ஏராளம். சான்றுகள் கிடைக்காவிட்டால் அவை தூக்கி எறியப்பட்டன. புதிய மொழியையும் புதிய மதத்தையும் கண்டவுடன் பழையவற்றை அநாகரிகம் எனவும் பட்டிக்காட்டுத்தனம் எனவும் நினைத்து எமது பழைய ஏட்டுச் சுவடிகளையும், மருத்துவம், சோதிடம் முதலியவற்றையும் பேணிப் பாதுகாக்கா து செல்லரித்து அழிந்துபோகவும் தீக்கிரையாக வும் விட்டுவிட்டனர் நம் தமிழர்.

பிரமிக்கத்தக்க மகத்துவங்களை எல்லாம் தக்க அறிவோ ஆராய்ச்சித் திறனோ இல்லாத காரணத்தால் புராண, இதிகாச, கர்ணபரம்பரைக் கதைகளெல்லாம் விஞ்ஞான ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படாத கற்பனைக் கதைகளெனவும் திறமையான சித்த ஆயுர்வேத மருத்துவங்களை கறுப்பு மருந்தெனவும் சமூகத்தில் நிலவி வந்த கலைகளை நாட்டு மனிதனின் காட்டுக் கூச்சல் எனவும் அவற்றைத் தட்டிக் கழித்தும், சுட்டெரித்தும் பிற்காலச் சந்ததிக்கு கடத்தாமல் அறிவிலிகளாக அழியவிட்டுவிட்டோம். அதனால்தான் கீரிமுகக் கதைக்கும் மனம் போன போக்கில் விளக்கங்கள் கொடுத்து வில்லங்கப்படு கின்றோம்.

இந்த நீரூற்றுப்பற்றிய அறிவு விளக்கம் ஆதிகாலத்தவர்களுக்கு இருந்தபடியால் தான் கீரிமுகத் தபசிக்கும் குதிரைமுக இளவரசிக்கும் சான்றோரால் அறிவுறுத்தப்பட்டது என நாம் கருதலாம்.

கீரிமுகம் எனும் ரோகத்தால் வருந்திய முனிவர் ஒருவர், இப்புண்ணிய ஸ்தலத்தைப்பற்றிக் கேள்வியுற்று அக்குகை யுள் தங்கி ஈஸ்வரனைச் சேவித்தும், தியானம் இருந்தும் தன் நோய் நீங்கப்பெற்றார். நகுலமுனிவர் எனக் காரணப்பெயர் கொண்ட அவரால் அத்திருத்தலம் நகுலேஸ்வரம் எனப் பெயர்பெற்றது. வடமொழி நகுலம் = கீரி.

கி.மு. 543ஆம் ஆண்டளவில் விஜயன் இலங்கை வந்தான் எனவும் பாண்டிய ராஜகுமாரியை விவாகம் செய்து தனது ஆட்சியை நிலை நிறுத்தத் தொடங்கியபோது, சிக்குச் சிதிலமடைந்து பழுதுபட்டுக் கிடந்த திருத்தம்பலேஸ் வரத்தையும் கதிரையாண்டவரையும், கோணேசர், கேதீஸ்வரர் கோவில்களையும் திருத்தியமைத்து, காசியிலிருந்து பிராமணரைக் கொண்டு வந்து கீரிமலையில் குடியேற்றி நித்திய பூசைக்கு வழிவகுத்துச் சென்றான் என்பதும் ஒரு வரலாறு.

சோழராசன் ஒருவன் தன் பரிவாரத்தோடும் கீரிமலைக்கு அருகே வந்து சிறிது காலம் தங்கி ஓய்வெடுத்து பூசை புனஸ்காரங்களில் ஈடுபட்டு நீராடி மகிழ்ந்து சென்றான் என்பதும் ஒரு கதை. அவன் இருந்த இடம் இப்போதும் 'வளவர்கோன் பள்ளம்' என அழைக்கப்படுகிறது. சோழ மகாராசாக்கள் வந்து செல்வதும் வழக்கமாயிற்று.

திசையுக்கிர சிங்கசோழ மகாராசா வின் மகளாகிய மாருதப்புரவீக வல்லிக்கு குதிரை முகநோய் வந்து யாராலும் தீர்க்க முடியாது கஷ்டப்படவே, கீரிமலை நீரூற்று பற்றிய மகிமை தெரிய வந்தது. அரசகுமாரி இங்கே வந்து மாவிட்டபுரம் கோவிலுக்கு வடக்கே (தற்போது தொழிற்சாலைப் புகையிரதப் பாதையும் பிரதான புகையிரதப்பாதையும் சந்திக்கும் இடத்தில்) பாளையம் அமைத்து சிறிது காலந்தங்கி நகுலமுனிவரிடம் உபதேசம் பெற்றும் நன்னீரூற்றில் நீராடியும் ஈஸ்வரனைப் பிரார்த்தித்தும் வந்தகாலை நோய் நீங்கப்பெற்றுப் பூரண சுகம் அடைந்தாள். கந்தசாமியார் விக்கிரகம் தருவித்து கோவிற்கடவையில் பெரும் ஆலயமெழுப்பி அதற்கான பணியாட்களையும் தருவித்துக் குடியேற்றினாள். பின்னர் உக்கிர சிங்கராஜன் அரசகுமாரியை விவாகம் செய்து தன் இராசதானியான கதிரமலைக்குக் கொண்டு சென்றான் என்பதும் பிற்பட்ட வரலாறு.

வரலாறுகள் எவ்வாறாய் இருப்பினும் பல விசேடம் யாவராலும் மதிக்கத்தக்கதாகவும் வணங்கத்தக்கதாகவும் இன்று வரை இருந்து வருகிறது. தொடர்ந்து இந்நோய் பற்றிய வரலாற்றைப் பார்ப்போம்.



(தொடரும்)




வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

PARAM GNANASWARAN
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
HomeLife Higher Standards
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# மினி உலககிண்ணம் 2006

## விளையாட்டுத் தகவல்கள் 200

**எஸ். கணேஷ்**

## CHAMPIONS TROPHY

விளம்பரம் வாசகர்களை இந்த 200வது கட்டுரையில் சந்திப்பதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன். இரண்டு சதங்களை போட்டுள்ளேன். மூன்றாவது சதத்தை போட முடியுமா என்பது நீங்கள் அளிக்கும் உற்சாகத்தில் தான் தங்கியுள்ளது. கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இப்பத்திரிகைக்கு எழுதுவதற்கு பல காரணங்கள் உள்ளன. முக்கியமாக ராஜா மகேந்திரனுக்கும் எனக்கும் இடைப்பட்ட நட்பும், மேலும் எனக்கு நூறுவீதம் அளிக்கும் எழுத்து சுதந்திரமும், நான் சொல்ல வரும் கருத்துக்களை அறிந்து எழுத்து பிழை இல்லாமல் வாசகர்களுக்கு வழங்கும் விதங்களே என்னை தொடர்ந்து எழுத வைக்கின்றது.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் மினி உலக கிண்ணப்போட்டிகள் இம்முறை இந்தியாவில் நடைபெறுகின்றன. 1998ஆம் ஆண்டு முதல்முறையாக தொடங்கப்பட்ட இந்த மினி உலக கிண்ணப் போட்டியில் தென்ஆபிரிக்கா அணியும் மேற்கு இந்திய தீவுகள் அணியும் இறுதி ஆட்டத்தில் மோதி தென்ஆபிரிக்க அணி வெற்றி பெற்றது. 2000 ஆண்டு நியூசிலாந்து அணியும் இந்தியாவும் மோதி நியூசிலாந்து அணி இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்றது. 2002 ஆம் ஆண்டு இந்தியாவும் சிறிலங்காவும் அணியும் மோதி மழைகாரணமாக இரண்டு நாடுகளும் இணை சம்பியன்களாக இறுதிப்போட்டியில் அறிவிக்கப்பட்டன. 2004ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணியும் இங்கிலாந்து அணியும் இறுதியாட்டத்தில் மோதி மேற்கிந்தியதீவுகள் அணி வெற்றி பெற்றது. ICC இன் தர வரிசைப்படி முதல் ஆறு நாடுகள் ஏற்கனவே தெரிவான நிலையில் மிகுதி நான்கு நாடுகளில் இருந்து (மேற்கிந்திய தீவுகள், சிறிலங்கா, பங்களாதேஷ், சிம்பாவே) இரண்டு நாடுகள் தெரிவு செய்யப்பட்டு மேற்கிந்தியா ஆறு நாடுகளுடன் இணைந்து கொள்ளும்.

| Gruop A | Grupo B |
|---|---|
| Australia | New Zealand |
| England | Pakistan |
| IndiaSouth Africa | |
| Qualifier-2 | Qualifier-1 |

### மினி உலக கிண்ண கடந்த கால வரலாற்றை எடுத்துப் பார்ப்போம்.

• மினி உலகக் கிண்ணப்போட்டியில் அதிகம் சதம் அடித்தவர்கள் பட்டியலில் தென் ஆபிரிக்க வீரர் கிப்ஸ்ும், இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் கங்குலியும் முதலில் உள்ளனர். இருவரும் தலா மூன்று சதங்களை எடுத்துள்ளனர்.

• 2004 இல் ஓவல் மைதானத்தில் நடந்த அமெரிக்காவுக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்து அணி நாலு விக்கெட் இழப்புக்கு 347 ஓட்டங்கள் அடித்ததே மினி உலகக் கிண்ணத்தில் ஒரு அணி அடித்துள்ள அதிகூடிய ஓட்டமாகும்.

• இந்திய அணி அதிகூடுதலாக எட்டு விக்கெட் இழப்புக்கு 307 ஓட்டங்கள் அடித்துள்ளது. 1998 இல் டாக்காவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா இந்த ஓட்டங்களை அடித்தது.

• 1998 இல் டாக்காவில் நடந்த ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு எதிரான தென்ஆபிரிக்க அணி 283 ஓட்டங்கள் அடித்துள்ளது. இரண்டாவதாக ஆடி அடிக்கப்பட்டுள்ள அதிகூடிய ஓட்டம் இதுவாகும்.

• 2004இல் சவுதாம்டனில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அமெரிக்க அணி 65 ஓட்டங்கள் எடுத்ததே ஒரு அணி பெற்ற குறைந்த ஓட்டங்கள் ஆகும்.

• 1998 இல் டாக்காவில் நடந்த இந்திய இங்கிலாந்து அணிகளிடையிலான ஆட்டத்தின் போது (இரு இனிங்சையும் சேர்த்து) மொத்தம் 570 ஓட்டங்கள் அடிக்கப்பட்டன. ஒரு ஆட்டத்தில் அடிக்கப்பட்ட அதிகூடிய ஓட்டம் இதுவாகும். இதில் இந்தியா 307 அவுஸ்திரேலியா 263 ஓட்டங்களும் அடித்தன.

• 2004 இல் நடந்த அமெரிக்க அவுஸ்திரேலிய அணிகளிடையிலான ஆட்டத்தில் இரு இனிங்ஸையும் சேர்த்து மொத்தம் 131 ஓட்டங்கள் அடிக்கப்பட்டது. இது ஒரு ஆட்டத்தில் அடிக்கப்பட்ட குறைந்த ஓட்டமாகும். இதில் அமெரிக்கா 65 ஓட்டங்களும், அவுஸ்திரேலியா 66 ஓட்டங்களும் அடித்தன.

• அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் இந்திய வீரர் கங்குலி முதல் இடத்தில் உள்ளார். 13 ஆட்டங்களில் ஆடியுள்ள இவர் மூன்றுசதம் மூன்று அரைசதத்துடன் மொத்தம் 665 ஓட்டங்கள் அடித்துள்ளார். அதிகூடுதலாக 141 ஓட்டங்கள் ஆட்டமிழக்காது அடித்துள்ளார். இதுமட்டுமல்லாமல், 12 பிடிகளையும் இவர் பிடித்துள்ளார். மற்றைய இந்திய வீரர்கள் ஆன் திராவிட் 442 ஓட்டங்களும், டெண்டுல்கர் 359 ஓட்டங்களையும் அடித்துள்ளனர்.

### அரையிறுதி, இறுதியாட்டங்கள் சமநிலையில் முடிவடைந்ததால் புதிய முறையில் முடிவு

மினி உலக கிண்ணத்தில் அரையிறுதி, இறுதியாட்டங்கள் போன்ற முக்கிய போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிந்தால், வெற்றி யாளரை நிர்ணயிக்க இத்தொடரில் Ball Out முறை பயன்படுத்தப்படவுள்ளது. இது கால்பந்து பெனால்டி ஷூட் அவுட் முறை போன்றதாகும். இதன்படி போட்டி சமநிலை ஆனால் ஒவ்வொரு அணியிலிருந்தும் ஐந்து பந்து வீச்சாளர்கள் தலா இரண்டு முறை நோக்கி பந்து வீச வேண்டும். விக்கெட்டை அதிக முறை வீழ்த்தும் அணி வெற்றிபெற்றதாக அறிவிக்கப்படும். இதிலும் சமநிலை ஏற்பட்டால் 'Sudden Death' முறையில் வெற்றி அணி அறிவிக்கப்படுவார்.

இம்முறை அவுஸ்திரேலியாவில் உள்ளூர் போட்டிகளில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. சர்வதேச அளவில் இந்த ஆண்டு பெப்ரவரியில் நியூசிலாந்து, மேற்கிந்தியா மோதிய 'ருவென்ரி - 20' போட்டியில் முதல் முறையாக 'போல் அவுட்' (Ball Out) உபயோகிக்கப்பட்டது. இதில் நியூசிலாந்து வெற்றி பெற்றது. இம்முறை உலகக் கிண்ண தொடரிலும் இது பின்பற்றப்படும். இது தவிர, தொடரில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள சில முக்கிய விதிகள். போட்டி தொடங்கும் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாக 12 வீரர்கள் கொண்ட பட்டியலை இரு அணித் தலைவர்களும் ஐ.சி.சி ஒருங்கிணைப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் 'நாணயச் சுழற்சி' போடுவதற்கு முன் வீரர்களை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் இது பற்றி போட்டி நடுவரிடம் முறையாக தெரிவிக்க வேண்டும். போட்டியில் வெல்லும் அணிக்கு இரு புள்ளிகள் வழங்கப்படும். 'ரை' அல்லது போட்டி ரத்து செய்யப்பட்டால், புள்ளிகள் பகிர்ந்தளிக்கப் படும். போனஸ் புள்ளிகள் வழங்கப்பமாட்டாது.

### மயிர் அவுட்

இந்தியாவில் இம்மாதம் நடைபெற்றுக் கொண்டுள்ள சாம்பியன்ஸ் கோப்பை போட்டிக்கான நடுவராக அவுஸ்திரேலிய நடுவர் டேரல் ஹேர் பணியாற்றமாட்டார் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) அறிவித்துள்ளது. இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே ஓவல் மைதானத்தில் நடந்த நாலாவது ரெஸ்ற் போட்டியில் பந்தை சேதப்படுத்தியாக இன்சமாம் மீது கள நடுவர் டேரல் ஹேர் குற்றம்சாட்டினார்.

இந்த குற்ற சாட்டை விசாரித்த ஐ.சி.சி இன்சமாமுக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் இல்லாததால் அவரை குற்றச்சாட்டிலிருந்து விடுவித்தது. இந்நிலையில் இந்தியாவில் நடைபெறவுள்ள சாம்பியன்ஸ் கோப்பைக்கு கள நடுவராக டேரல் ஹேரை நியமிக்கக் கூடாது என சர்வசேத கிரிக்கெட் கவுன்சிலிடம் இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் வலியுறுத்தின. இந்த கோரிக்கையை ஏற்ற ஐ.சி.சி சாம்பியன்ஸ் டிராபிக்கு நடுவராக டேரல் ஹேர் நியமிக்கப்படமாட்டார் என அறிவித்துள்ளது.

### மயிரை வெற்றி கொண்ட இன்சமாம்!

பந்தை சேதப்படுத்தியதாக கூறப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல் ஹக் விடுவிக்கப் பட்டார். ஆனால் போட்டியில் விளையாட மறுத்த குற்றத்திற்காகவும், நடுவரை எதிர்த்ததற்காகவும் நான்கு ஒரு தின போட்டிகளில் விளையாட தடை விதித்து ஐ.சி.சி தீர்ப்பளித்துள்ளது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே ஓவல் மைதானத்தில் நடந்த நாலாவது ரெஸ்ற் போட்டியில் பந்தைச் சேதப்படுத்தியதாக இன்சமாம் மீது கள நடுவர்கள் டேரல் ஹேர், பில்லி டாக்ட்ரோவ் ஆகியோர் குற்றம் சாட்டி பாகிஸ்தானுக்கு ஐந்து ஓட்டங்கள் அபராதம் விதித்தனர். இதனால் தேநீர் இடைவேளைக்கு பின்னர் ஆட்டத்தை தொடர இன்சமாம் தலைமையிலான அணி மறுத்தது. இதனால் போட்டியை இங்கிலாந்து வென்று விட்டதாக கள நடுவர்கள் அறிவித்தனர். இந்த வழக்கு தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) போட்டிகளின் தலைமை நடுவர் ரஞ்சன் மடுகலே லண்டனில் 27, 28 தேதியில் இன்சமாமிடம் விசாரணை நடத்தினார். இந்த விசாரணையின் முடிவு குறித்து ஐ.சி.சியின் செய்தி தொடர்பாளர் பிரன்முர்ஹாட்ராய்ட் செய்தியாளர்களிடம் கூறியதாவது - பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாமிடம் போட்டி நடுவர் ரஞ்சன் மடுகலே விசாரணை நடத்தினார். இந்த விசாரணையின் முடிவில் இன்சமாம் பந்தை சேதப்படுத்தவில்லை என்று தீர்ப்பு கூறினார். ஆனால் கள நடுவரின் தீர்ப்புக்கு மதிப்பு அளிக்காமல் இரண்டு சந்தர்ப்பங்களில் அவரை எதிர்த்தும், போட்டிகளில் விளையாடவும் இன்சமாம் மறுத்துள்ளார். இது சர்வசேத கிரிக்கெட் கவுன்சில் விதிமுறை மூன்றின்படி குற்றமாகும். எனவே இன்சமாமுக்கு நான்கு ஒருதின போட்டிகளில் விளையாட தடை விதித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

மேல்முறையீடு செய்ய மாட்டேன் - இன்சமாம் இந்த தீர்ப்பு குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் செய்தியாளர்களிடம் கூறியது - நாங்கள் பந்தை சேதப்படுத்தவில்லை என்று தீர்ப்பு கிடைத்துள்ளது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த இங்கிலாந்துக்கெதிராக விளையாடமுடியாத நிலை ஏற்பட்டது. அதற்காக அவர்களிடம் மன்னிப்பு கோருகிறேன்.

நாங்கள் போட்டியில் யாரையும் ஏமாற்றவில்லை என்று உறுதியாகியுள்ளது. இந்த தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப போவதில்லை, என்று அவர் கூறினார். மேலும், இந்த தீர்ப்புக்கெதிராக மேல்முறையீடு செய்யப் போவதில்லை என இன்சமாம் அறிவித்து விட்டதால் இந்தியாவில் நடைபெறும் சாம்பி யன்ஸ் கோப்பையில் பாகிஸ்தான் அணியில் அவர் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நடந்து முடிந்த போட்டிகளை எடுத்துக்கொண்டால் சிறிலங்கா அணி முன்னணி வகிக்கின்றது. சிறிலங்கா அணி பங்களாதேஷ் அணியை முதல் ஆட்டத்திலும் சிம்பாவே அணியை இரண்டாவது ஆட்டத்திலும் வென்றுள்ளது.

சிறிலங்கா அணி சார்பாக புதிய நம்பிக்கை நட்சத்திரமாக உப்பால் தரங்க திகழ்ந்து வருகின்றார். முதல் இரு ஆட்டங்களிலும் சதம் அடித்த இவர் இரண்டு புதிய சாதனைகளையும் ஏற்படுத்தியுள்ளார். தான் பங்கேற்றுள்ள 30 ஒருநாள் போட்டிகளில் ஐந்து சதம் அடித்த உலகின் முதல் வீரர் என்ற சாதனை படைத்தார். தவிர 30 ஒருநாள் போட்டிகளில் 1000 ஒட்டங்களை கடந்த இரண்டாவது, இலங்கை வீரர் என்ற சாதனையையும் ஏற்படுத்தி உள்ளார்.

முன்னதாக இலங்கையில் ரோய் டயஸ் 27 போட்டிகளில் 1000 ஓட்டங்களை கடந்தார். கடுமையான போட்டிகள் நிலவ உள்ள இந்த மினி உலக கிண்ணப்போட்டிகளில் இதுவரை ஒரு தடவை ஓட அவுஸ்திரேலிய அணி சம்பியன் பட்டத்தை வெல்லவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பொறுத்திருந்து பார்ப்போம். யார் சாம்பியன் பட்டத்தை வெல்ல போகின்றார்கள் என்பதை....!!!




நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.

இலவச ஆலோசனைகளுக்கு : **416.439.8549**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)

Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician

LG.Ayurvedic Medical Services (SriLanka)





# வீட்டின் விலையில் அதிகரிப்பு

றொறொன்ரோ பெரும்பாகத்தில் செப்ரெம்பர் 2006 இன் வீட்டின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கைமாறிய வீடுகளின் எண்ணிக்கை 6622. இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களினதும் சராசரி வீட்டுவிலை கடந்த வருடத்தை விட அண்ணளவாக 5% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த வருடம் (2005) செப்ரெம்பரின் வீட்டின் சராசரி விலை $335,334 ஆகக் காணப்பட்டது. ஆனால் இந்த வருடத்தின் செப்ரெம்பரின் வீட்டின் சராசரி விலை $349,142 ஆக அதிகரித்துள்ளதை புள்ளிவிவரம் காட்டுகின்றது. கனடிய மோட்கேஜ் மற்றும் வீட்டிற்கான நிறுவனத்தின் உயரதிகாரியின் கருத்துப்படி, கனடிய பொருளாதாரத்தின் ஸ்திர நிலைமையே வீட்டின் விலையின் அதிகரிப்பிற்கு காரணமென தெரிகிறது. மேலதிக வேலைகள் உருவாக்குவதும், குறைந்த மோட்கேஜ் வட்டிவீதமும், அடுத்த வருடத்திலும் வீட்டின் விலையிலும், விற்கப்பட்டு, வாங்கப்பட இருக்கும் வீடுகளின் எண்ணிக்கையிலும் ஒருவகை சீரான நிலைமை காணப்படலாம் எனவும் அவர் எதிர்வு கூறியுள்ளார். றொறொன்ரோ பெரும்பாகத்தில் முக்கியமாக றொறொன்ரோ கிழக்குப்பாகத்தில் அமைந்துள்ள Markham & Eglinton பகுதியில் இந்த வருடம் குறிப்பாக செப்ரெம்பரில் விற்கப்பட்ட கொண்டோமெனியங்களின் எண்ணிக்கை கடந்த வருடத்து செப்ரெம்பரை விட இரண்டு மடங்காகக் காணப்படுகின்றது.

இதற்கு காரணம் Markham & Eglinton பகுதியில் கட்டப்பட்டு விற்கப்பட்டுக் கொண்டு இருக்கும் "Village" என்ற அடுக்குமாடிக் கட்டிடமே ஆகும். இந்த கட்டிடம் (Highrise Condominium Building) வருமானம் குறைந்தவர்களிற்காக, ஒன்ராரியோ அரசாங்கத்தின் ஆதரவுடன் கட்டப்பட்டு விற்கப்படுகின்றது. இந்தக் கட்டிடத்தில் ஓர் அலகை வாங்க விரும்புவர்களின் வருமானம், குடும்பமாக $45,000 இற்கு குறைவாக இருந்தால் அரசாங்கத்தின் உதவியுடன் Condo. Unit வாங்கமுடியும். பொதுவாக Credit நல்லதாக இருக்கவேண்டும், மிகமிகக் குறைந்த ஒரு தொகை இருந்தால், இந்தக் கட்டிடத்தில் உங்களிற்கான ஓர் அலகை வாங்கிக் கொள்ளலாம். அரசாங்கத்தின் உதவியால் கிடைக்கும் பணத்திற்கு மாதாந்த கட்டணமோ, வட்டியோ வழங்கத் தேவையில்லை என்பதனை ஞாபகத்தில் கொள்ளவும்.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் -237**

நீங்கள் வாங்கிய அலகை (Unit) விற்கும் போது, கிடைக்கும் இலாபமோ / நட்டமோ அதற்கேற்ப இந்தக் கடன் தொகையை திருப்பிக் கொடுத்தால் போதும். இந்தக் கட்டடத்தொகுதி தனியாக இருப்பவர்களுக்கு, தனிப்பெற்றோர்களுக்கு வருமானம் குறைந்தவர்களுக்கு, வயதானவர் களுக்கு, அரசாங்க கட்டிடங்களில் இருப்பவர்களுக்கு உதவுவதற்கான ஒருவகைக் திட்டத்தினால் கட்டப்பட்டு விற்கப்படுகின்றது. ஒன்பது மாடிக் கட்டிடத்தைக் கொண்ட இந்த அடுக்குமாடிக் கட்டிடம் முற்றாக கட்டிமுடிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது இங்கு வாழத்தொடங்கி விட்டார்கள். இதுபோன்ற திட்டத்தினால் கட்டப்பட்டு விற்கப்படும் அலகுகள் ஒன்ராரியோவின் வெவ்வேறு பாகங்களிலும் அமையப்பெற்றுள்ளன / அமையப் பெறுகின்றன.

ஒரு வீட்டின் / கொண்டா மெனியத்தின் வருடாந்த ஆதனவரியை **(Property Tax)** கணக்கிடுவது எப்படி?

> **புதிய வீடுகளின் விலையிலும் மாற்றம்**
>
> புதிய வீடுகளின் விற்றவிலை கடந்த 12 மாதங்களின் 3.8% இனால் றொறொன்ரோவில் அதிகரித்துள்ளது. ஆனால் அல்பேட்டாவிலுள்ள கல்கரியில் (Calgary) இன் அதிகரிப்பு 60.6% ஆகவும் எட்மென்ரனின் (Edmonton) அதிகரிப்பு 27.8% ஆகவும் காணப்படுகின்றது. றொறொன்ரோவின் அதிகரிப்பு முந்தைய மாதங்களை விட குறைந்துள்ளது என்பதைக் கவனிக்கவும்.

நாங்கள் இருக்கும் இடத்திற்கு ஏற்ப வீட்டின் ஆதனவரி மாற்றம் பெறும் என்பது அனேகர் அறிந்தது. ஒவ்வொரு வீட்டிற்குமான பெறுமதி ஒன்ராரியோ அரசின் அறிவுறுத்தலின்படி ஒவ்வொரு வருடமும் கணிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றது. இந்த பெறுமதி எதிர்வரும் சிலவருடங்களிற்கு தற்காலமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதாவது இப்பொழுது அனுப்பப்பட்ட பெறுமதியே வீட்டின் பெறுமதி Assessed Value அல்லது Current Value Assessment என்று அழைக்கப்படுகின்றது. இது வீட்டின் அளவிற்கும், இடத்திற்கும், வீட்டின் மேலதிக வேலைகள் (Upgrades) போன்றவற்றிற்கேற்ப மாறுபடும்.

அத்துடன் ஒவ்வொரு City / Town களும் தமது பகுதியின் வருமானம் செலவுகளிற்கேற்ப Budget தயாரித்து அதற்கேற்ப எவ்வளவு வருமானம் தேவையெனக் கணக்கிடும் அதற்கேற்ப பெறப்படும் எண் Mill Rate என கூறப்படும். இடத்திற்கேற்ப Mill Rate மாறும் உதாரணமாக கீழுள்ள அட்டவணையை பார்க்கவும்.

| Location | Residential | Commercial |
|---|---|---|
| Markham | 0.99 | 2.37 |
| Mississauga | 0.97 | 2.55 |
| Toronto | 0.83 | 4.06 |
| Brampton | 1.14 | 2.70 |

இந்த Mill Rate வீட்டின் Assessed Value இனால் பெருக்கி ஆதனவரி கணக்கிடப்படும்.

உதாரணமாக: மார்க்கத்தில் இருக்கும் $300,000 பெறுமதியான வீட்டின் ஆதனவரி (Property Tax)

ஆதனவரி = 300,000 X 0.99 = $2,970

(.99 - அட்டவணையிலிருந்து பெறப்பட்டது)

**இதே வீடு றொறொன்ரோவில் இருந்தால்**


ஆதனவீட்டு வரி = 300,000 X 0.83 = $2,490

**அல்லது இதே வீடு பிறம்ரனில்** (Brampton) இருந்தால்

வீட்டுவரி = $300,000 X 1.14 = $3,420

வீட்டின்விலை ஒன்றாக இருந்தபோதும் ($300,000) இருக்கும் இடத்திற்கேற்ப ஆதனவரி கூடிக் குறைவதைக் காணலாம். இவ்வாறே வியாபாரக் கட்டடங்களின் வரியும் கணக்கிடப்படும்.

கணக்குகள் தொடரும்.

இப்பொழுது இரு இடங்களில்,

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969**

145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**

*Independently owned & operated

**Raja M. Mahendran,** P. Eng.

(Broker / Owner)

**Brand New Semi Detach**




9th Line & North of Steeles
- 1972 sq.ft.
- 4 Bedroom /
- 3 Washroom
- 4 Brand new Appoiances
- $339,900

**Detached Bungalow**




Scar. Golf Club & Lawrence
- Detached Bungalow
- 3 Bedroom
- 2 Bedroom BSMT Apt.
- Walkout BSMT
- $279,900

**Detached 2 Storey**



Morningside & Sheppard
- 4 Bedroom
- 3 Washroom
- BSMT Finished Walk out
- 2 Kitchen
- $299,900

**Detach 2 Storey**



Morningside & Sheppard
- 3 Bedroom
- BSMT Finished
- BSMT Apt. Possible
- $239,900

**Townhouse 2 Storey**



Morningside & Ellesmere
- 3 Bedroom
- Upgraded / New Appliances
- Low Maintence fee
- $184,900

**Nantha Aiyadurai**

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

திரு. இரங்கநாதனும் நானும் நடித்த நாடகங்களுள் மற்றுமொரு நாடகங் குறித்த அநுபவம் மறக்க முடியாதது.

இரங்கநாதன் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு கிறித்துவக் கல்லூரியிலிருந்து வெளியேறிவிட்டார். நானும் இடைநிலைப் படிப்பை முடித்துக் கொண்டு புவியியல் துறையில் பட்டம் பெறுவதற்காகக் கோவைக் கலைக் கல்லூரிக்குச் சென்றுவிட்டேன். கிறித்துவக் கல்லூரியில் அப்பொழுது புவியியல் துறை இருக்கவில்லை.

எனினும் நாம் இருவரும் 1957ஆம் ஆண்டு செலையூரில் அரங்கில் தோன்ற வேண்டிய சூழ்நிலை ஒன்று ஏற்பட்டுவிட்டது. செலையூர் விடுதி ஆண்டு விழாவுக்கு எனக்குத் தம்பி முறையான திரு. தெய்வேந்திரா இராசையா என்னை அழைத்திருந்தார். இரங்கநாதனும் அவரது நண்பர் ஒருவரின் விருந்தினராக வருகை தந்திருந்தார்.

உண்மை என்னவென்றால் கல்லூரியை விட்டுச் சென்றபின் எங்களுக்குள் தொடர்பு எதுவும் இருக்கவில்லை. நான் கல்லூரியை விட்டுச் சென்றதும் இரங்கநாதனுக்குத் தெரியாது. நான் கிறித்துவக் கல்லூரியிலேதான் தொடர்ந்தும் படித்து வருகிறேன் என்ற எண்ணத்தில் அவர் என்னை அங்கு தேடியிருக்கின்றார். விடுதி உணவகத்தில் என்னைச் சந்தித்த பொழுது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

இருவரும் ஒரு நாடகம் போட வேண்டும் என்றார். ‘விழாக் குழுவிடம் கேட்டியா?’ என்றேன். நிகழ்ச்சி ஒன்று மேடையேற முடியாத சூழ்நிலை. அந்த இடத்துக்கு ஏதாவது செய்யச் சொல்லி அவர்கள் தன்னைக் கேட்டதாகக் கூறினான்.

‘இன்னும் அரைமணி நேரத்தில் விழாத் தொடங்கப் போகிறது. இப்படி அவசரத்தில் மேடையேறி உள்ள பெயரையும் கெடுக்கப் போகிறாயா?’

‘பெயரை எடுப்போமேயன்றிக் கெடுக்க மாட்டோம். என்னிலே உனக்கு நம்பிக்கை இருக்கல்லே! உனக்கும் சமாளிக்கும் திறமை இருக்கு. நாடகம்

# எனது நாடக அனுபவங்கள் (10)

மிக இலகு. நல்லாகவே செய்யலாம். யோசியாதே! இதுதான் கதை, கவனமாய்க் கேள்’ என்று இரங்கநாதன் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

## திடீர் நாடகம்

‘பாத்திரங்கள் இரண்டே இரண்டுதான். நான் மந்திரவாதி. நீ பார்வையாளன். நான் மேடையில் நின்று எனது மந்திர சக்தியைப் பற்றிப் பெருமையாகப் பேசுவேன். யாரையும் மயக்குவேன், மயக்கியபின் பேச வைப்பேன், பின்னர் எழுப்புவேன் என்றெல்லாம் சொல்லி, என் சக்தியைச் சோதித்துப் பார்க்க விரும்புகிறவர்கள் மேடைக்கு வரலாம் என்று சொல்லிச் சபைக்குச் சவால் விடுவேன்.

‘நீ இந்த நேரத்தில் சபையில் இருந்து மேடைக்கு வரவேண்டும். இரண்டு நிமிடங்கள்வரை இருவரும் உரையாடுவோம். நீ மந்திர தந்திரங்களில் நம்பிக்கை இல்லாதவன் போலப் பேச வேண்டும். என்னைத் தாக்கிப் பேச வேண்டும். எனக்குக் கோபம் வந்து மந்திரங்களைச் சொல்லி உன்னை மயக்குவேன். நீ மயங்கி விழ வேண்டும். விழவி டாமல் நான் உன்னைத் தாங்கிக் கொண்டுபோய் ஒரு கதிரையில் இருத்துவேன்.

# சென்னை அனுபவங்கள் - 2

‘பின்னர் சபையிலே இறங்கிச் சில பொருட்களைச் சேகரிப்பேன். உனக்குத் தெரியுந் தானே, கல்லூரி மாணவர் கைகளில் என்ன இருக்கும் என்று. பேனா, பென்சில், புத்தகம், கைக்குட்டை என்று அவற்றைத்தான் வைத்திருப்பார்கள். மேடையில் அவற்றை நான் ஒவ்வொன்றாகக் காட்ட நீ பெயர்களைச் சொல்ல வேண்டும். அவற்றைக் காட்டும் ஒழுங்கு இதுதான், எழுது’ என்று இரங்கநாதன் சொல்ல நான் எழுதினேன்.

1. பேனா, பென்சில், புத்தகம், கைக்குட்டை (வெள்ளை)
2. கைக் கடிகாரம், இரண்டு அணா, சங்கிலி, மோதிரம்
3. மல்லிகைப் பூ, செருப்பு

‘இந்த ஒழுங்கை மட்டும் நீ நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். பிழைவிட்டியோ குட்டு வெளிப்பட்டுவிடும். எப்படி நாடகம்?’
‘நல்லாயிருக்கு. சொந்தமா? இரவலா?’
‘இரண்டுந்தான்!’
‘உனக்கு ஒப்பனை ... ?’
‘செய்யப் போகிறேன். கன்னத்தில் கருப்புப் புள்ளி ஒன்று வைக்கப் போகிறேன். காற்சட்டையை மாற்றி வேட்டி கட்டப் போகிறேன். தலையில் ஒரு துண்டைக் கட்டப் போகிறேன். கைப் பையும் ஒன்று தேடப் போகிறேன். அவ்வளவுதான்!’

‘நெற்றியிலே திருநீறு, குங்குமம் எல்லாம் வேணும்.’
‘போட்டிடலாம்!’
‘ஆளை மயக்குவதற்கு குழையோ மந்திரக் கோலோ தேவையல்லவா?’
‘குழையோடு வருகிறேன். சரி, மேடையிலே சந்திப்போம்.’
‘நாடகத்துக்கு என்ன பேர்?’
‘மந்திரவாதி!’
‘மந்திரவாதி என்று மட்டும் அறிவிக்கச் சொல். நடிகர்களின் பெயர்களை முடிவில் அறிவிக்கலாம்.’
‘நல்லது.’

## மந்திரவாதி

நான் திறந்தவெளி அரங்கை அடைந்தபோது பார்வையாளர் பக்கம் முட்டி வளிந்தது. இருக்க இடம் கிடைக்க வில்லை. பின்பக்கமாக நின்று பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்துடன் சேர்ந்து கொண்டேன்.

எமது நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டது. இரங்கநாதன் அசல் மந்திரவாதியாகவே வந்தான். வரும் பொழுதே ஓம் கிரீம் கரீம் என்று சொல்லத் தொடங்கியவன் ஐந்து நிமிடங்கள் வரை வாயை மூடவே இல்லை.

கடைசியில் சவால்! ‘யார் என்றாலும் வரலாம்!’ அப்பொழுது எதிர்பாராதது நடந்தது!

நான் கடைசித் தொங்கலிலிருந்து மேடையை அடைவதற்கிடையில் முன்னுக்கு இருந்த இரண்டு பேர் பாய்ந்து மேடையில் ஏறிவிட்டார்கள்!

நான் படிகள் வழியாக அமைதியாக ஏறி மூன்றாவது ஆளாக நின்றேன். இரங்கநாதன் படு விவேகி. அவன் எப்படியும் சமாளிப்பான் என்ற துணிவு எனக்கு! அதனால் எனக்குப் பதற்றம் எதுவும் இருக்கவில்லை. அவன் முதலாவது ஆளுடன் சில நிமிடங்கள் உரையாடல் நிகழ்த்திக் கடைசியாக அன்று பகல் என்ன சாப்பிட்டது என்று கேட்டான். அந்த மாணவன் சோறு என்றான். இவன் என்ன கறி என்றான். அவன் கோழி இறைச்சி என்றான்.

அதனைக் கேட்டதும் இரங்கநாதன் ‘அபத்தம்! அபத்தம்! நம்ம ஆத்தாள் மாமிச பட்சணிகள் மீது வரமாட்டாள்’ என்று சத்தம் போட்டு அவனைப் போகச் சொன்னான். மற்றைய மாணவயையும் ஏதோ ஒரு சாட்டுச் சொல்லி (என்ன சாட்டு என்பதை மறந்து விட்டேன்) அகற்றி விட்டான்.

அடுத்து நின்ற என்னையும் மந்திரவாதி பல கேள்விகள் கேட்டார். அவர் என்னைத் தெரிவு செய்யக்கூடிய விதமாகப் பதில்களைக் கொடுத்தேன். அவர் ‘நீதான் ஆத்தாளுக்கு உகந்த ஆள்’ என்று சொன்னதும் எனது உரையாடல் திசை திரும்பியது.

‘உன்னையும் உன் ஆத்தாளையும் இந்த இடத்தைவிட்டுத் துரத்தத்தான் நான் வந்திருக்கிறேன்! இந்த இடத்திலிருந்து அல்லாமல் சமுதாயத்திலிருந்தே உங்களைப் போன்ற பச்சோந்திகளை ஒழித்துக்கட்ட வேண்டும்! நீ அப்பாவி மக்களை மயக்கி



**கவிஞர் வி. கந்தவனம்**

தொடர்ச்சி 16ஆம் பக்கம்




# ஒக்கேனக்கல் நீர்வீழ்ச்சி

# காவேரியின் உக்கிரத் தாண்டவம்

## தமிழ்நாடு சுற்றுலாத் தளங்கள் _1

### வாசகர்களின் வேண்டுகேளுக்கிணங்க!

*அன்பான வாசகர்களின் வேண்டுகோளிற்காக, இந்தப்பகுதி ஆரம்பிக்கப்படுகின்றது. உலகில் பல பாகங்களிலிருந்தும் இந்தியாவிற்கு சுற்றுவாவிற்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது அனேகர் அறிந்த உண்மை. இவர்களில் பலர் எம்மைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழ் நாட்டில் உல்லாச இடங்கள் சம்பந்தமாக அனுபவமிக்கவரால் கட்டுரை வரையப்படுகின்றது.*

*எமது எண்ணப்படி "விளம்பரம்" த்தின் தரம் மேலும் ஒருபடி சிறக்கும் என எதிர்பார்க்கின்றோம். உங்களது ஆக்க பூர்வமான கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகிறன.*

- பதிப்பாளர்-



*தமிழ் வரலாற்றுடனும் கலாசாரத்துடனும் பின்னிப் பிணைந்திருக்கும் காவேரிக்குப் பல உருவங்கள். கர்நாடக மாநிலத்தில் தலைக் காவேரியில் சிறிய ஓடையாக பிறக்கும் காவேரி, மலைகளுக்கு இடையே குழந்தையாகத் தவழ்ந்து, வளர்ந்து கும்மாளமும் கொண்டாட்டமுமாகப் பயணித்து, தமிழ்நாட்டுக்குள் நுழைந்த பிறகு அடக்கமும் பணிவும் சோர்வும் கொண்டு, திருச்சியில் அகண்ட காவேரியாகி, வயதாகி தளர்ந்து பூம்புகாரில் கடலுடன் கலந்து மறைகிறாள்.*

*தமிழ்நாட்டில் நுழைந்ததும் ஆழ்ந்த அமைதி கொண்டுவிடப் போகிறோம் எனத் தெரிந்துதானோ என்னமோ, தமிழ்நாட்டுக்குள் நுழையும் போது காவேரியிடம் அப்படியொரு வேசம், கோபம். காவேரியின் உச்சபட்ச உக்கிரத் தாண்டவம் அரங்கேறும் அந்த இடம்தான் ஒக்கேனக்கல் நீர்வீழ்ச்சி (Hogenakkla Waterfall). தமிழ்நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டவர்களும் தவறாமல் செல்லும் இடம்.*



*கர்நாடகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் எல்லையாக அமைந்திருக்கிறது ஒக்கேனக்கல் நீர்வீழ்ச்சி. தர்மபுரியிலிருந்து ஒரு மணி நேரப் பயணம். பென்னாகரத்தைத் தாண்டியதும் சிறிய மலைக்குன்றுப் பகுதி ஆரம்பமாகும். அதன்பிறகு ஏற்றமும் இறக்கமுமாக மாறி மாறிச் செல்லும் சாலையில் பத்துநிமிடம் பயணித்தால் ஒக்கேனக்கல் நீர்வீழ்ச்சியை அடையலாம். மழைக் காலங்களில் பென்னாகரத்தைத் தாண்டியதுமே நீர்வீழ்ச்சியில் குதித்துக் கும்மாளமிட்டு விளையாடும் காவேரியின் சலங்கைச் சத்தங்கள் மெல்லிதாகக் கேட்கும். அதன்பிறகு அது அதிகமாகிக் கொண்டே வரும். பக்கத்தில் நெருங்கியதும்தான் தெரியும் காவேரியின் கோபமும் வேசமும்.*

*நீர்விழ்ச்சிக்கு கொஞ்சம் தூரத்திலேயே வாகனங்களை நிறுத்திவிடுவார்கள். அதன்பிறகு நடந்துதான் செல்லவேண்டும். கரடு முரடான பாதை வழியாக, பாறைக் குன்றுகளுக்கு இடையே நுழைந்து இறங்கிக் கொஞ்சதூரம் சென்றால், எதிரில் ஆங்காங்கே மரங்களுக்கிடையே மின்னல் போல் நீர்வீழ்ச்சி தென்படும். நூற்றுக்கணக்கான தலைமுறைகளையும் பண்பாடுகளையும் பார்த்துக் கொண்டு நிற்கும், ஒக்கேனக்கல் நீர்விழ்ச்சியைப் பார்க்கும் எவருக்கும், முதல் பார்வையில் மலைக்கத்தான் தோன்றும். பல பிரமாண்டமான பாறை முண்டுகளுக்கு இடையே குதித்து விளையாடி, நுரை தெறித்துப் பாய்ந்து, குமிழியிட்டு, குலுங்கச் சிரித்துக் கொண்டே ஓடுவாள் காவேரி. காலம் காலமாக காவேரியின் கரங்களால் அடிபட்டுத் தேய்ந்து மழுங்கி தெம்பிழந்து தோன்றும் பாறைகள். அந்தப் பாறைகளைப் பார்ப்பதுக்கு பரிதாபமாகவும் இருக்கும், அதன் மென்மை மனதுக்கு ஒரு கவித்துவ உணர்வையும் தரும்.*

*ஒக்கேனக்கலில் மொத்தம் முப்பதுக்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள் உள்ளன. வரிசையாக அவை விழுந்து, குதித்து விளையாடி, பின்பு அமைதியடைந்து செல்லும் அழகைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். நேரம் போவது தெரியாது, பசி எடுக்காது. வெள்ளம் நிறைந்த மழைக்காலங்களில் நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை ஐம்பதுக்கும் அதிகமாகும். இதற்கு நேர்மாறாக கோடையில் காவேரியின் பிரவாகம் குறைந்திருக்கும். அப்போது நீர்வீழ்ச்சிகளின் எண்ணிக்கை பத்து அல்லது அதற்கும் குறைவாகிவிடும். ஆனால், அப்போதும் காவேரி அழகுதான். பெருமழைக் காலங்களில் வெள்ளம் அதிகரிக்கும் போது, நீர்வீழ்ச்சிகள் அனைத்தும் மூடி முங்கி ஒரே நீர்ப்படலமாக பாய்ந்து நீர் விழும் அற்புதக் காட்சியை இங்கு காணலாம். இக்காலங்களில் நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு எவரையும் காவல்துறையினர் அனுமதிப்பதில்லை.*

*ஒக்கேனக்கல் நீர்வீழ்ச்சியின் மற்றொரு சிறப்பு பரிசல் பயணம். ஒக்கேனக்கலுக்குள் நுழையும் போது பரிசல்காரர்கள் நம்மை சுற்றிவரத் தொடங்கிவிடுவார்கள். புதியவர்கள் பரிசல்காரர் களிடம் ஏமாறாமல் கவனமாக இருக்க வேண்டும். அரை மணிநேரப் பரிசல் பயணத்துக்கு ஒரு நபருக்கு பத்து ரூபாய் வீதம் வசூலிக்கிறார்கள். நான்கைந்து பேர் நண்பர்களாக சென்றால், மொத்தமாக பேசி நீண்டதூரம் வரைக்கும் சென்று வரலாம். இரண்டு பக்கமும் இருநூறு அடி உயரத்துக்கு உயர்ந்து நிற்கும் மலைப் பாறைகளுக்கு இடையை பயணித்து நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு அழைத்து வருவார்கள் பரிசல்காரர்கள். அப்போது அங்கே, மலை உச்சியிலிருந்து கீழே குதிக்கும் சாகசச் சிறுவர்களைப் பார்க்கலாம். இப்படி அவர்கள் குதிக்கும் சாகசத்தைப் பார்க்க ஐந்து ரூபாய் காசு கொடுக்க வேண்டும். அதனை அவர்கள் கையில் தராமல் தண்ணீருக்குள் போட்டுவிட வேண்டும். தண்ணீருக்குள் ஆழத்தை நோக்கிச் செல்லும் அந்த ஐந்து ரூபாயை எடுக்க மலை உச்சியிலிருந்து உயிரைப் பணயம் வைத்து அவர்கள் குதிப்பார்கள். மயிர்சிலிர்க்கும் சாகசம் அது.*

## வழிப்போக்கன்

*இந்த சாகசத்தைக் கடந்ததும் நீர்வீழ்ச்சியின் சாரல் முகத்தில் முள்ளாக குத்தும். கொட்டும் அருவிக்கும் பாறைக்கும் இடையே நுழைந்து நம்மை அவர்கள் அழைத்துச் செல்லும் பயணம் அதிபயங்கரமானது. ஆனால், பாதுகாப்பானதும்கூட. பரிசலிலேயே பயணித்து கர்நாடக எல்லையை அடையலாம். ஆழ்ந்த அமைதியாக காவேரி இருக்கும் அந்த இடத்தில் இறங்கி குளிக்கவும் செய்யலாம். ஆனால், நீச்சல் தெரிந்திருக்க வேண்டும்.*

*எம்.ஜி.ஆர்., விஜயகாந்த் இரண்டு பேருக்கும் மிகவும் பிடித்த "சூட்டிங் ஸ்பாட்" என்று ஒக்கேனக்கலைச் சொல்வார்கள். இவர்கள் இருவரின் பல திரைப்படங்கள் இங்கே படம்பிடிக்கப் பட்டிருக்கின்றன. பாரதிராஜாவின் முதல் மரியாதையின் பல பகுதிகளும்கூட இங்கேதான் படம் பிடிக்கப் பட்டன. சந்தனக் கடத்தல் வீரப்பன் அதிக காலங்கள் இப்பகுதியில் ஒளிந்திருந்தான் என்று சொல்வார்கள்..*

*காவேரி பெருக்கெடுத்துப் பாயும் காலங்களில் இரண்டு கிலோமீட்டர் தூரத்துக்கு வரிசையாக விழும் ஒக்கேனக்கல் நீர்வீழ்ச்சிகளும் சுற்றிலுமுள்ள இயற்கைக் காட்சிகளும் வறண்ட மனத்தை உடையவர்களையும் கவிஞர்களாக்கும் வனப்பு மிகுந்தது. அந்த வனப்புதான் தமிழகத்துக்கு வரும் சுற்றாலாப் பயணிகள் அனைவரையும் தன்னை நோக்கி ஈர்க்கிறது. இயற்கை எவ்வளவு மகத்தான சக்தி என்பதை அப்போது பார்ப்பவர்கள் உணரலாம்.*

### உணவு

ஒக்கேனக்கல் தமிழ்நாடு சுற்றுலாத்துறை விடுதியில் நாம் கேட்கும் உணவு வகைகளைச் சமைத்துத் தருவார்கள். ஒக்கேனக்கலில் சாலையோரங்களில் விற்கப்படும் மீன்கள் பிரசித்தமானவை. சமைத்துத் தருவதற்கு என்று நபர்களும் இருக்கிறார்கள். பொருட்களை வாங்கிக் கொடுத்துவிட்டால் சமைத்துத் தந்து விடுவார்கள். ஒக்கேனக்கலில் மது விற்பனை செய்யப்படுவதில்லை. எனவே, மதுப்பிரியர்கள் பென்னாகரம் தாண்டியவுடன் வாங்கி வைத்துக் கொள்வது நல்லது.

### எப்படிச் செல்ல வேண்டும்?

சென்னையிலிருந்து ஒக்கேனக்கலுக்குச் செல்ல, ரயிலில் சேலம் சென்று அங்கிருந்து அரசுப் பேரூந்திலோ அல்லது வாடகை வாகனம் அமர்த்திக் கொண்டோ, ஒக்கேனக்கல் செல்லலாம். இதற்கு எட்டு முதல் பத்து மணி நேரம் ஆகும். அல்லது சென்னையிலிருது தர்மபுரிக்கு பேரூந்தில் சென்று அங்கிருந்து ஒக்கேனக்கல் செல்லலாம். ஆனால், இதற்கு அதிக நேரம் ஆகும். கிட்டத்தட்ட பன்னிரெண்டு முதல் பதிமூன்று மணி நேரம் ஆகும். சென்னையிலிருந்து தமிழ்நாடு சுற்றுலாத் துறையும் பேரூந்தை இயக்குகிறது. சென்னையிலிருந்து சென்றுவர ஒரு நபருக்கு ஐநூறு ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை ஆகும்.

### தங்கும் விடுதி வசதி

ஒக்கேனக்கலில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை தங்கும்விடுதி உள்ளது. சில தனியார் தங்கும்விடுதிகளும் உள்ளன. ஆனால், தனியார் தங்கும் விடுதிகளைவிட சுற்றுலாத் துறையின் விடுதியே சிறந்தது, வசதியும் சுகாதாரமும் கொண்டது. சனி, ஞாயிறு போன்ற வார இறுதி தினங்களில், இரண்டு படுக்கை வசதிகொண்ட அறை ஒருநாள் வாடகை நானூறு ரூபாய். குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறை 750. சனி, ஞாயிறு தவிர்த்த மற்ற வார தினங்களில் சரி பாதி வாடகை மட்டுமே வசூலிக்கப்படும். கூட்டமும் குறைவாக இருக்கும். அல்லது தர்மபுரியில் தங்கிவிட்டு இங்கே வரலாம். தர்மபுரியில் மூன்று நட்சத்திர தங்கும்விடுதி உட்பட எல்லாத் தரத்திலும் விடுதிகள் உள்ளன.


## ஏக்கர் நிலம் வருமானத்துடன்

**வீடும் வியாபாரமும்**

| Metal Recycling<br>**Auto Body Shop**<br>Yunk Yard 2 Acres land with<br>House and Basesemt | **Auto Body shop**<br>House with Basement<br>Yunk Yard<br>10 acres |
|---|---|

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு
வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep.)
**416.230.7820 / 905.696.7310**
**HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666**

KENNEDY / FINCH பகுதியில் கோவில், வீதி நடைதூரத்தில்
Sep. entrance Basement வருமானத்துடன் அழகான இல்லம்

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...



# தீபாவளி நல்வாழ்த்துக்கள்

Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

*கடந்த இதழ் தொடர்ச்சி*

# கர்ப்பிணிகளுக்கு ஆலோசனை

*(66) கர்ப்பிணிகளுக்கு ஆலோசனை - கர்ப்பமுற்ற பெண்கள் ஆரோக்கியமான உணவு அதாவது முள்ளங்கி, முருங்கைக்கீரை, கரற், அப்பிள், நெல்லிக்காய் மீன், முட்டை ஆகியவற்றை உண்பதுடன் மனப்பதட்டமில்லாது மகிழ்ச்சியாக இருந்தால் ஆரோக்கியமான குழந்தையைப் பெறலாம். தினமும் வீட்டினுள் ஆவது நடந்து அப்பியாசித்தல் வேண்டும். தினமும் பழரசம் குடிக்க வேண்டும். சுட்டு ஆறிய நீரை தாரா-ளமாகக்குடிக்க வேண்டும். இனிமையான பாடல்களைக்கேட்டல், அன்பாக பழகும் சுற்றாடலில் வாழ்தல், துக்கமான சூழலை தவிர்த்தல் வயிற்றிலுள்ள சிசுவை ஆரோக்கியமாக வளரச்செய்யும்.*



*(67) கர்ப்பப்பை சுருங்க - சில பெண்களுக்கு பிரசவமானபின் கர்ப்பப்பை சுருங்க தாமதமாகலாம். அவர்கள் இலவங்கப் பட்டையை (கறுவாப்பட்டை) இடித்து அரித்து அந்ததூளில் இரண்டு மேசைக்கரண்டி இரண்டு கிளாஸ் நீர் விட்டு ஒரு கிளாஸ் ஆக வற்றக்காச்சி வெல்லத்துடன் ஒரு அவுன்ஸ் காலையில் குடிப்பதுடன் சில உடற்பயிற்சிகளும் செய்தால் விரைவில் கர்ப்பப்பை சுருங்கிவிடும்.*

*(67) காலில் ஆணிக்கு - அம்மான்பச்சை என்னும் செடியின் காம்பை ஒடித்தால் அதிலிருந்து பால் வரும். அந்தப்பாலை காலை, மாலை கால் ஆணியின் மேல் தடவிவந்தால் கால் ஆணி குணமாகும்.*

*(68) காமாலை நோய்க்கு - கோவை இலைச்சாற்றை காலை, மாலை இரண்டு அவுன்ஸ் குடித்தால் சிலநாட்களில் காமாலை குணமாகும். உணவில் கொவ்வை இலை தாராளம் சேர்க்கவும். காரம்கூடாது.*

*(69) காது இரைச்சலுக்கு - கடல் நுரையை வாங்கி அத்துடன் வேப்பெண்ணை விட்டுக்காச்சி மூன்று துளிகள் விட்டால் இரைச்சல் குணமாகும். குப்பைமேனிச்சாறு, சிறுகுழந்தையின் சிறுநீர் (மூத்திரம்) அத்துடன் வசம்பு, மஞ்சள், சீயாக்காய் வகைக்கு ஒருதுண்டு இவற்றை இடித்துப்போட்டு அடுப்பிலேற்றி நன்றாக காச்சி இறக்கி ஆறவிடவும். இந்தத்தைலத்தை பத்திரப்படுத்தி இதை உடம்புக்கு நன்கு தேய்த்து வாரம் இருமுறை குளித்துவந்தால் காது மந்தம் குணமாகும், இரைச்சலும் நீங்கிவிடும்.*

*(70) காது வலிக்கு - தாழம்பூ தைலம் வடித்து அதில் இரண்டுசொட்டு காதில் விட்டால் காதுவலி குணமாகும். ஊமத்தம் பூவை கசக்கி பிழிந்து அதில் இரண்டுசொட்டு விட்டால் காது வலிகுணமாகும். பிரண்டைத்தண்டை அனலில் வாட்டி பிழிந்து சாறு எடுத்து அதில் இரண்டு துளிகள் காதில்விட்டால் காதுவலி குணமாகும், சீழ்வடிதலும் குணமாகும்.*


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D

Holistic Practitioner (canada)

Nutrition & fitness (Canada)

'யோக சித்தர்' வவுனியா, இலங்கை

Tele. - 416.291.3022

E.Mail-DRVPS@Hotmail.com


**பரம்பரை வீட்டு வைத்தியம்**

*(71) காக்காய் வலிப்புக்கு - காக்காய் வலிப்பில் துன்பப்படுபவருக்கு வெள்ளை வெங்காயம் (உள்ளி) தட்டிப்பிழிந்து அதில் இரண்டு மூன்று சொட்டு காதினுள் விட்டால் உடன் வலிப்பு நீங்கும் என்கிறது ஒரு வாகடம். வர்மப்புள்ளி வைத்தியமுறைப்படி வலிப்பை உடன் நீக்குவதற்கு உதட்டின் மேற்சொண்டில் மூக்குக்கு கீழ் உள்ள பீலியில் ஒரு புள்ளி இருக்கிறது, அதில் சரி-அரவாசிக்கு மேல் (Rhenzong. Du.26) என்னும் புள்ளி உண்டு இதை ஒரு விரலால் விட்டுவிட்டு அழுத்தினால் வலிப்பு உடன் குணமாகும். அதன்பின் தகுந்த வைத்தியம் செய்யலாம்.*

*தாமரைப் பூ, இலை இரண்டையும் காயவைத்து இடித்து சூரணம் செய்து ஒரு சுண்டக்காய் பிரமாணம் தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் மூளைபலப்பட்டு காக்கை கலிப்பும் குணமாகும் சாத்தியமுண்டு.*

*இந்த வலிப்பு உள்ளவர்கள் எலுமிச்சம்பழம், வெள்ளைப்பூண்டு தினம்பாவித்தால் நல்லபலன் கிடைக்கும்.*

*(72) கழுத்துப்பட்டை கறுப்பு நீங்க - சிலருக்கு கழுத்துப்பட்டை சற்று கறுப்பாக இருக்கும் இதை நீக்குவதற்கு சிறிதளவு பசுப்பாலில் ஒரு தேக்கரண்டி தேன்விட்டு, கலக்கி வைத்துக் கொண்டு ஒரு பழுத்த தேசிப்பழத்தை வெட்டி அந்த தேசிப்பழப்பாதியை தேன்கலந்த பாலில் தொட்டு கழுத்தில் பூசி சுமார் அரைமணி நேரம்கழித்து வெந்நீரால் கழுவிவிடவும் இப்படி சிலநாட்கள் செய்துவர நிறம் மாறி ஏனைய இடத்து சருமம்போல் ஆகிவிடும்.*

*(73) காமம் குறைக்க - விழாம்பழம் காம இச்சையைக்குறைக்கும் தினம் தினம் சாப்பிடுபவர்கள் சன்யாசத்தை விரும்புவர் என ஒரு வாகடம் கூறுகிறது.*

*(74) காமம் பெருக - வெங்காயத்தை பசுநெய்யில் வதக்கி உண்டால் காமம் பெருகும். உளுத்தம்மா, வாதுமைப்பருப்பு, பயறு இவையும் காம விருத்தினிகள்.*

*(75) காந்திஜி மருத்துவம் - காந்திஜி சுரத்தை குறைப்பதற்கு சுலபமான ஒரு வழி-யைக்கூறி வந்தார்.*

*அதாவது ஒரு கட்டிலில் கம்பளியை விரித்து ஒரு துவாயை குளிர் நீரில் நனைத்து பிழிந்து கம்பளிமேல் விரித்து அதன்மேல் படுத்து கம்பளியால் உடம்பு முழுவதையும் மூடவும், தலையையும் நனைத்து பிழிந்த துவாயால் இறுக கட்டிக்கொள்ளவும். சற்று நேரத்தில் நன்கு வியர்த்து சுரம் குறைந்து விடும் அதன்பின் வைத்தியரிடம் சென்று சுரத்திற்கான காரணத்தை அறிந்து தகுந்த சிகிச்சை பெறலாம்.*

*இது கடும்சுரத்தை உடன் குறைப்பதற்கு உதவும் சிகிச்சைமுறை. இதையே காந்திஜி செய்து வந்ததால் இதை காந்திஜி மருத்துவம் என்கின்றனர்.*




MOHAN

HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan

D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems

HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210

(At Middle Field), Scarborough, M1S 4Z4



18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 178

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | 3 | 4 |
| | | | | | | | 5 |
| | 6 | 7 | | | 8 | | |
| | | | 9 | | | | |
| 10 | | | | 11 | | 12 | |
| | 13 | | | | | | |
| | | | | | | 14 | |
| 15 | | | | | | | |

**இட - வல**

1. புரட்டாதி மாதம் இராணுவப்புரட்சி நடந்த நாடு
3. பிழிந்து எடு
5. நன்கு அரை (வல-இட)
7. பக்குவம் (வல - இட)
8. எரி (வல - இட)
9. குமரி (வல - இட)
10. கொடு
12. ஓடம் (வல - இட)
13. பெருமழை
14. பொறுமை
15. புட்டு அவிக்க, நீர்வடிக்க உதவும்

**மேல் - கீழ்**

1. ஒரு விளையாட்டு
2. கூறு
3. உருகு
4. இஸ்லாமியர்களின் புனித மாதம்
6. நிகரற்றிரு
7. பனை மட்டையின் ஒரு பகுதி
8. முருகன் ஔவைக்கு இப் (பெயரெச்சம்) பழம் கொடுத்தார்
11. மனமிளகு
12. பல் மினுக்க உதவுவது
15. சாம்பல் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வி | லா | று | | | அ | ரி |
| ர் | கா | | கா | ர | ண | ம் | |
| க் | | | க் | | | மி | உ |
| க | | க | ழ | னி | | | டு |
| ம் | க | ட | வ | | ம் | | ப் |
| | | ல் | | | ன | | பு |
| றை | தி | | ஓ | வி | ய | ம் | |
| மு | க | மா | லை | | ச | | தீ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் October 27, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**178 இல் வெற்றி பெற்றோர்**

1) P. Mahathevan, Donmills
2) S. Mahendran, Mississauga


- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

# வாழ்வில் உண்மையில் நான் விரும்புவது?

"வாழ்வில், நான் எவற்றைத் தேர்ந்தெடுக்கிறேனோ அவை எனக்கு மிகமிக முக்கியமானவை. எனக்குள்ளிருக்கும் இறைசக்தியைத் தட்டியெழுப்பி வளர்ப்பதற்காக மட்டுமே நான் இந்த உலகில் உதித்திருக்கிறேன். என் வாழ்வினை நான் கொண்டாடி மகிழ வேண்டும். எனக்கு இன்பமளிக்கும் செயல்களை நான் ஆற்றிட வேண்டும்" எனும் பிரபல்ய மேற்கத்தைய அருட்தந்தை ஒருவரின் வாக்கு, வாழ்வில் எம்மை எதிர்கொள்ளும் மூன்று முக்கிய சவால்களை வரிசைப்படுத்துகின்றன. உனது உள்ளார்ந்த இறைசக்தி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அதைக் கண்டுபிடிப்பது எப்படி? கண்டுபிடித்தபின் இது தான் அது, என்று எப்படித் தெரிந்து கொள்வது?

எனக்கு வேண்டும் என்று உண்மையில் நான் விரும்புவது என்ன? இக்கேள்விக்கு உனது பதில்கள் தான், இறைவன் உனக்கே உனக்காக நிர்ணயித்திருக்கும் பாதையின் திசையை உனக்குச் சுட்டிக்காட்டும். வாழ்க்கையைக் கொண்டாட வேண்டுமென்றால்....? எனக்கு அமைந்திருக்கும் ஜீவியத்தை நான் எப்படிக் கொண்டாடுவது? மகிழ்ச்சியுடன் கொண்டாடத் தக்க ஒன்றாக எனது இப்போதைய வாழ்க்கையை நான் எவ்வாறு மாற்றி அமைப்பது? இப்படியெல்லாம் செயற்பட்டுக் கொண்டாடிட நேரத்திற்கு நான் எங்கே போவது? இன்னொரு முறை அதே கேள்வியைக் கேள்? எனக்காக உண்மையில் நான் விரும்பி யாசிப்பது என்ன? இக்கேள்விக்கு உனது பதில்கள் வாழ்வைக் கொண்டாடுவதற்கு ஏற்ற செயற்பாடுகளிற்கு உன்னை அழைத்துச் செல்லும். உனது வீழ்ச்சிக்கு வழிவகுக்கும் செயற்பாடுகளை நீ தவிர்த்திட உதவும். எனக்கு மகிழ்ச்சி தருபவற்றை நான் செய்யவேண்டும். எவை என்னை மகிழச் செய்கின்றன? உன் வாழ்வில் எவ்வளவு பொழுதினை உனது மகிழ்ச்சியாகச் செலவழிக்கின்றாய்? உனது இன்பத்தைப் பெருக்குவதற்காக, இன்னும் எவ்வளவு நேரத்தை உன்னால் செலவழிக்க முடியும்? வாழ்வில் எனக்கு முக்கியமாக என்ன வேண்டும் என இன்னொருமுறை உன்னையே நீ கேட்டுக்கொள். பூரண அமைதியும் பேரின்பமும் நிறைந்த வாழ்வைப் பெற்றிட நீ செய்ய வேண்டிய யாவற்றிற்குமான உந்துசக்தியை உனது பதில்கள் வெளிப்படுத்தும். நீ இந்த முக்கியமான கேள்வியை இவ்வளவு நாட்களும் உன்னைக் கேட்காமல் பயந்து பயந்து வாழ்ந்திருந்தாயே, அந்த நிலையிலிருந்து நீ மீண்டு கொள்வாய்.

பயத்திற்குப் பதிலாக, நீ கொண்டாடிடத் தகுந்ததாக உன் வாழ்க்கை நிச்சயம் மாறும். இது உனது உள்ளார்ந்த இறைசக்தியை மகிழ்விக்கும். ஒருவிதமான குறிக்கோளோ, அர்த்தமோ இல்லாது, போகும் திக்குத்திசை தெரியாது தட்டுத் தடுமாறிக் கொண்டு இன்றுவரை நீ வாழ்ந்திருக்கலாம். இன்று உனது நாட்குறிப்பையும் (டயரி) பேனாவையும் கையிலெடுத்து தனிமையில் இருந்து எழுத ஆரம்பி. மீண்டும் மீண்டும், "வாழ்வில் உண்மையாக எனக்கு என்ன வேண்டும்" என்பதைத் திரும்பத்திரும்பக் கேட்டு உனக்கு உண்மையாக புரிந்துணர்வு வருமட்டும் முயற்சித்து எழுது. நற்பலன் நிச்சயம் கிடைக்கும்.

எனது வாழ்வைக் கொண்டாடி, எனக்கு இன்பமளிக்கும் யாவற்றையும் நான் செய்வதற்காக, எனது உள்ளார்ந்த இறைசக்தியை நான் உணர்வதற்கு இன்றுமுதல் நான் முயற்சி செய்வேன்.

அதைமட்டும் தைரியத்துடன் நீ உபயோகித்தால் உனது ஜீவியத்தையே உடனடியாகத் திசைதிருப்பக்கூடிய பாரிய சக்திவாய்ந்த உறுதிப்பாடு ஒன்று இருக்கிறது. அது என்னதெரியுமா? "நான் இருக்கிறேன்!" என்பது தான் அது! எனக்கு விரும்பமாயிருக்கிறது அல்லது எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்லாதே! நான் முயற்சி செய்கிறேன்! ஆம்! இதுதான் சரி! அதுதான் எனக்கு வேண்டும் அல்லது எனது ஆசை அதுதான் என்று கூறாதே! வெட்கத்தை விட்டு வாய்திறந்து உரக்கக் கூவு, "நான் வாழ்கிறேன்." ஆம்! நான் நல்லவன், நல்லவள்! விருப்பத்துடன் நான் செய்யும் சகல நன்மைகளையும், திறமையாகச் செய்கிறேன். ஆகவே எனக்குத் திரும்ப வரும் நன்மைகளை யும் பெற்றுக்கொள்ளவும் எனது இதயம் திறந்திருக்கின்றது. அவ்வளவு நல்லவனாக நான் வாழ்வதனால் என்னை வந்தடைவதற்காக நன்மை என்னைத்தேடி அலைகின்றது என்றால் அது நல்லது தானே! வாழ்வில் சகல கோணங்களிலிருந்தும் மேலும் மேலும் நன்மைகளை இப்போ நான் பெறுகின்றேன். இப்போ இதைக் கொஞ்சம் பாருங்கள். என்னைச் சூழ்ந்திருக்கும் நன்மைகளிற்கும், ஆசீர்வாதங்களிற்கும் நன்றி. எனது சகல நல்ல சந்தர்பங்களிற்கும் நன்றி. நல்ல அநுபவங்களிற்கு நன்றி. சகலவற்றையும் நான் திறமையுடன் செய்வேன். நான் செய்யும் நன்மை எனக்கும் புத்துயிர் ஊட்டுகின்றது. இத்தகைய நல்லவனாய் இருப்பதால் ஏற்படும் புளகாங்கிதம் என்னை மயிர்க்கூச்செறியப் பண்ணுகின்றது. சக்திவாய்ந்த அதிகாரப் பரவலில் எனதுதிறமை, என்னையே ஆச்சரியப்பட வைக்கிறது.

இப்போ இதைப் பாருங்கள். நன்மை என்னைச் சூழ்ந்திருக்கின்றது. நன்மை என்னை மூழ்கடிக்கின்றது. முற்றுமுழுதாய் நன்மையாகவே நான் மாறிவிட்டேன். எனது உள்ளும் புறமும் நன்மைதான். நான் செய்யும் இத்தனை நன்மைகளிற்கும் சிறந்த கைம்மாறுகள் எனக்குக் கிடைக்கின்றன. நான் நன்மைகளை அள்ளி அள்ளிக் கொடுக்க, எனக்கும் திரும்பத் திரும்ப, மென்மேலும் நன்மைகள் கிடைக்கின்றன. இத்தனைக்கும் நான் யார் இப்படி நல்லவனாய் இருக்க? உன்னிடம் இல்லாதவை என நீ நம்பியவற்றை

## ஆளுமை (87) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

ஒன்றுதிரட்டிப் பார்ப்பதில் மட்டுமே இன்றுவரை நீ காலத்தைக் கழித்திருக்கலாம். இன்று நீ உண்மையில் நல்லதோர் ஆத்மா என்பதை உறுதிப்படுத்த உன்னைப்பற்றிய நன்மைகளை எல்லாம் ஓர் ஒலிப்பதிவு நாடாவில் (Tape Recorder) பதிவு செய், அல்லது எழுதி வை. இந்த Tape ஐ திரும்பத் திரும்பக்கேள். அல்லது எழுதியவற்றைத் திரும்பதிரும்ப வாசி. உனது பிரக்ஞைக்குள் பதியுமட்டும் இதைத் திரும்பத் திரும்பச் செய். அப்போது நன்மை உனது பிரக்ஞையிலிருந்து உனது வாழ்வினுள் சிதறி உன்னை மகிழப்பண்ணும்.

நான் எத்துணை நல்லதோர் ஆத்மா என்பதை உணர்ந்து அதை ஒப்புக்கொண்டு கொண்டாடுவதில் இன்றுமுதல் ஈடுபடுகிறேன்.

*மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-270-1214*

லலிதா புரூடி



SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence
From $75.00

Truck licence A-Z
From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book


- A-Z & D-Z up grade
- One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
416.412.7618 / 416.913.9574
416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

SAFETY TRUCKS
Training School Ltd.
Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3

# உறவுக்கும் அப்பால்

## ஓடும் நீர் உறைவதில்லை 22


நமது வாழ்வின் இயக்கத்தின் அதிமுக்கிய காரணிகளாகக் கருதப்படும் காரணிகள் இரண்டு. ஒன்று நேரம் (Time) மற்றையது பணம் (Money). உலகில் வாழும் கோடானகோடி மக்களின் நாளாந்த வாழ்க்கைப் போராட்டம் இந்த இரு காரணிகளையும் சமநிலைப்படுத்துவதற்கானதே. நேரம் இருப்பவர்களிடம் பணம் பற்றாக்குறையாகவும் பணம் இருப்பவர்களிடம் நேரம் பற்றாக்குறையாகவும் காணப்படுடும். இந்தவகையானவர்கள் மொத்தமக்கள் தொகையில் குறிப்பிட்ட அளவு பங்கைப்பெறுகிறார்கள். ஆனால் அதிபெரும்பான்மையானவர்களிடம் இந்த இருகாரணிகளும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன. மிகமிகக் குறுகிய சத்வீதத்தைக் கொண்டவர்களிடம் தான் இந்த இரண்டும் போதுமான அளவு உள்ளது. ஒப்பீட்டளவில் இரண்டு சதவீதமானவர்களிடம் மட்டுமே போதிய அளவு நேரமும் பணமும் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

தனிமனிதனது வாழ்க்கைப்போராட்டத்தில் முக்கியபங்கைப் பெறுவதும் இந்தப் பணம் பற்றியதும் நேரம் பற்றியதுமான எதிர்பார்ப்புத்தான். நாளாந்த வாழ்வியல் போராட்டத்தில் ஒன்றை இழந்து தான் மற்றையதைப் பெறவேண்டியிருக்கும். இங்கே இழக்கப்படுவதும் பெறப்படுவதும் ஒப்பீடு செய்யப்படும் போது இழப்பதைவிடப் பெறுவது அதிகமாகவும் சாதகமானதாகவும் இருக்க வேண்டும் என்பதே ஒவ்வொருவரதும் எதிர்பார்ப்பு. இந்த எதிர்பார்ப்புக்கள் மிகப் பெரும்பான்மையானவர்களது விடயத்தில் நிறைவேற்றப்படாமலே அவர்களது வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்றது. அதாவது எதை எதிர்பார்த்தார்களோ அதை அடையமுடியாமல் ஆறடிக்குள் அடங்கி விடுகிறார்கள். ஆண்டாண்டு காலமாக அயராது ஓடிய ஓட்டம் இறுதியில் பயனற்றுப் போய்விடுகிறது.


KG Master
416.725.5112


நமது வாழ்வில் பல்வேறுவகையான சிக்கல்களுக்கும், வெறுப்புக்களுக்கும், வேதனைகளுக்கும் காரணம் என்ன என்பதை மிக இலகுவாகக்கண்டு கொள்வதற்கான மனப்பக்குவம் நம் எல்லோருக்கும் உண்டு. இருப்பினும் பெரும்பாலானவர்கள் இந்த மனப்பக்குவத்தை நடைமுறைபடுத்துவதில் அக்கறையற்றவர்களாக உள்ளனர். இந்த அக்கறையின்மை காரணமாகத் தமது வாழ்நாளின் அதி பெரும்பான்மையான பகுதியைத் தவறான வழியில் பயன்படுத்தி தமது வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவருகிறார்கள். மொத்தத்தில் ஒரு பயனும் இல்லாது இந்தப் பூமிக்குப் பாரமாக இருந்தது தான் இவர்களது செயற்பாடு.

ஒருவரது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதைப் பொறுத்தே அவரது செயற்பாடுகளும் இடம் பெறுகின்றன. அந்த நோக்கத்தை மையமாக வைத்தே அவரது தெரிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தத் தெரிவுகளின் அடிப்படையிலேயே அவரது நோக்கம் அதன் முக்கியத்துவம் அதனால் ஏற்படும் விளைவுகள் என்பன தீர்மானிக்கப்படுகின்றன. எனவே வாழ்வின் நோக்கத்தைப் புரிந்தவர்களது தெரிவுகளுக்கும் புரியாதவர்களது தெரிவுகளுக்கும் இடையில் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. வேறுபாடு என்று கூறுவதை விட இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றது என்று கூறுதல் பொருத்தமானது.



ஒருவரது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கான காரணிகள் எவை என்று ஒரு ஆய்வை மேற்கொள்வோமாக இருந்தால் பல காரணிகள் பட்டியலிடப்படும். இந்தப் பட்டியலை அவரவர் மேற்கொள்பவர்களாக இருப்பின் பிரச்சினை ஒன்றாக இருப்பினும் காரணிகள் பலவாகவும் வேறுபடுவனவாகவும் காணப்படும். அதாவது ஒரே பிரச்சினை இருவருக்கிடையில் வெவ்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுவதாகக் காணப்படும். இங்கு நாம் ஒரு முக்கியமான விடயத்தைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அதாவது முற்றிலும் ஒரேமாதிரியான பிரச்சினையொன்று இருவருக்கிடையில் வேறுபட்ட காரணிகளால் தீர்மானிக்கப்படுவதைக் காணலாம். இதற்கான அடிப்படைக் காரணம் என்ன?

வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அதற்கான காரணங்களுக்கும் அடிப்படையாக அமைவது ஒன்றே ஒன்றுதான். மகத்தான மனிதப்பிறவியை மழுங்க வைத்துப் பயனற்றதாக்கும் பயங்கரமான மனநோய்தான் அது. அதுதான் சுயநலம். இந்தச் சுயநலம் எனும் மனநோய் இல்லாதவர்கள் எவரும் இல்லை. பிறக்கும் போது இல்லாத இந்த நோய் படிப்படியாக ஒருவரைக் பற்றிக் கொள்கிறது. ஒருவரது எதிர்பார்ப்புக்களைப் பொறுத்து அதன் அளவு உருவாக்கப்படுகின்றது. சுயநலத்தின் உச்சநிலையில் உள்ளவர்கள் முற்று முழுதாகத் தமக்காகத் தான் வாழ்வார்கள். மனைவியும் குழந்தைகளும் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் போது மதுபோதையில் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஒருசிலர் தனது மனைவியையும் பிள்ளைகளையும் மனதில் கொள்ளாது மற்றவர்கள் தம்மை மகாத்மாவாக நினைக்கட்டும் என்று போலி நாடகமாடுவார்கள். வேறுசிலர் சுயநலத்தின் அடுத்த நிலையில் உள்ளவர்கள். ஓரளவுக்கு தன்னைத் தனது குடும்பத்திற்காக அர்ப்பணிப்பவர்கள் இவர்கள். தமது குடும்பத்தின் நலனுக்காக நேரத்துடனும் பணத்துடனும் போராடிக் கொண்டிருப்பவர்கள். தன்னை குடும்பத்தின் ஒரு அங்கமாகக் கருதி உழைப்பவர்கள். குடும்பத்தின் மொத்த நலனை அடிப்படையாகக் கொண்டு அதற்கான தெரிவுகளை மேற்கொள்பவர்கள். இந்தக் குடும்பநலவாதிகள் முன்னைய சுயநல அல்லது தன்நலவாதிகளை விட ஓரளவு உயர்வானவர்கள்.

இன்னுமொருவகையானவர்கள் குடும்பநல வாதிகளைவிட ஒருபடி உயர்ந்து உறவு நலவாதிகளாக இருப்பார்கள். இவர்கள் தமது சொந்தக் குடும்பத்தின் நலனுடன் தமது குடும்பம் சார்ந்த நெருங்கிய உறவினர்களது நலனுக்காகவும் உழைப்பார்கள். தனது பிள்ளைபோல் தனதும், மனைவியினதும், உறவினர்களது பிள்ளைகளும் நன்றாக வரவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்கள் ஒப்பீட்டுரீதியில் முனனைய இருவகையினரைவிடச் சிறிது உயர்வானவர்கள். இந்த மூன்று வகையானவர்கள் பற்றிய உண்மை என்னவெனில் இவர்கள் இந்த உலகில் பிறந்ததும் இறந்ததும் நாளடைவில் மறைந்து போய்விடும். இவர்கள் பிறந்தார்கள், இறந்தார்கள் என்பதை நீண்டகாலத்திற்கு உறுதிப்படுத்துவது அவர்களது நாட்டின் அரசாங்க ஆவணமான பிறப்புச் சாட்சிப்பத்திரமும் இறப்புச் சாட்சிப் பத்திரமும் தான்.

நான்காவது வகையினர் ஊர்நலவாதிகள். இவர்கள் தாம் வாழும் ஊருக்காக உழைப்பவர்கள். அந்த ஊரின் முன்னேற்றத்திற்காக, பாடசாலைகள், வாசிகசாலைகள், விளையாட்டு மைதானங்கள் என்று எந்த ஒரு அமைப்பையும் சாராது தமது முயற்சியால் உருவாக்குபவர்கள். இவர்களின் சேவைக்காக அர்ப்பணிப்புக்காக இவர்களது உருவப்படங்கள் கட்டிய கட்டடங்களின் ஒரு அறையில் பொருத்தப்பட்டிருக் கும். இவர்களது பொதுநல சேவையின் அளவைப் பொறுத்து சிலருக்கு அந்த ஊரின் பிரதான சந்தியில் ஒரு உருவச்சிலை கூட நிறுத்திவைக்கப்பட்டிருக்கும்.

இங்கே குறிப்பிடப்படும் அடுத்தவகையினர் இந்தப் பிறப்பின் நோக்கத்தை அவர்களது வாழும் காலப்பகுதியில் சந்தேகத்துக்கிடமின்றி உணர்ந்து கொண்டவர்கள். தமது பிறப்பின் நோக்கம் பிறருக்காக வாழ்வது தான் என்பதை நிரூபிப்பவர்கள். குடும்பம், உறவுகள், ஊர் என்றவரையறை எதுவுமின்றி சமுதாயம், நாடு, உலகம் என்ற ரீதியில் தம்மை அர்ப்பணிப்பவர்கள். இந்த மகத்தான மனஉணர்வினால் இந்த மண்ணில் வாழ்பவர்களது வாழ்க்கையை மேம்படுத்தும் பண்புகளை விதைப்பவர்கள். இவர்களது அர்ப்பணிப்புக்களால்தான் ஒரு சமுதாயம், நாடு என்பன உயர்நிலைக்கு தள்ளப்படும். இவர்களது மகத்தான அர்ப்பணிப்பின் பிரதிபலிப்புத்தான் எனது வீட்டின் சுவரில் பொருத்தப்பட்டிருக்கும் உருவப்படங்கள். பாரதியார், விவேகானந்தர், அன்னை தெரேசா, மகாத்மா காந்தி போன்றவர்களது உருவப்படங்கள். இவர்கள் எனது உறவினர்கள் அல்லர். என்னைப்போன்று சாதாரணமாகப் பிறந்து தமது உறவுக்கும் அப்பால் தமது பணத்தையும் நேரத்தையும் மட்டுமல்ல தமது வாழ்க்கையையே மற்றவர்களுக்காக முதலீடு செய்தவர்கள். அதனால் எனது இல்லத்தைப் போன்று எத்தனையோ கோடி இல்லங்களைப் பெருமிதப்படுத்தும் உத்தமர்கள் இவர்கள்.






கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master

(Over 25 years of experience)

(416) 291-2611

(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old


*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*


வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

**Kanthan: 416.291.3997**







- No Spraying
- No Smelling
- No Moving

ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: **416-286-2880**

நகைச்சுவைத் தொடர் 157

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும் என்பார்கள்
அங்குலமாகவும் அடியாகவும் ஆமி நகர்ந்ததின் விளைவு ?



போர் வந்தால் சமாதானம் வரும். ஆனால் சமாதானம் பற்றி போர் நடந்தால்? எளியாரை வலியார் வருத்தினால் வலியாரைத்தெய்வம் கேட்குமென்பார்கள். ஆனால் தெய்வத்தையே வருத்தி தேரைத்தீக்கிரையாக்கி ஐயரையே அரைநிர்வாணமாக்கி குழந்தைகளைக்குரல்வளை நெரித்து கொலை செய்கிறார்கள்.

புரட்டாதிச்சனி விரதத்திற்கு சாப்பிட்டுவிட்டு திரும்பி திரும்பிப்படுத்தாலும் உலகருக்கு பகல் தூக்கம் வரவில்லை.

தெய்வம் இருப்பது எங்கே? என மனம் நொந்து போன நேயரொருவர் கேட்ட பாடல் வானொலியில் ஒலிபரப்பாகிக்கொண்டிருந்தது.

உலகண்னை நேற்று என்ரை மச்சாளின்ரை கோல் வந்தது. யாழ்ப்பாணத்திலை பாங்கிலை காசிருந்தும் எடுக்கேலாதாம். எடுத்தாலும் சாமான் சக்கட்டு வாங்கேலேதாம். குழந்தைகளுக்கு பால்மா இல்லையாம். பெரியாக்களுக்கு மருந்தில்லையாம். அன்னம்மாக்கா ஆஸ்பத்திரியிலை எக்ஸ்றே படம் எடுக்கேலாதாம்.



ஓ.. எக்ஸ்றே படம் எடுக்கேலாது. ஆனால் ஆமிக்காரர் சந்திக்கு சந்தி ஆக்களை நிப்பாட்டி வைச்சு படம் எடுக்கினம் எண்டு,



மதுரை இடைத்தேர்தலில் கலைஞர் கருணாநிதியை தாக்கிப்பேசிய செல்வி ஜெயலலிதாவைப்போல மூச்சுவிடாமல் பேசிமுடித்தா ஆட்டிலறி அன்னம்மா.



குண்டடியில் குடும்பம் இறக்க,
அழும் குழந்தையைத்தாலாட்ட அம்மா இல்லை
பசித்தழுதால் பால்மா இல்லை

உலகருக்கு 34 வருடங்களுக்கு முந்தி கலகலப்பு நகைச்சுவை மாதஇதழில் வாசித்த நகைச்சுவை கவிதை ஞாபகம் வந்தது.



லட்டான கண்ணே
ஆராரோ ஆரிவரோ
ஆரடித்து நீயழுதாய்
சிணுங்காதே கண்ணா
லட்டான கண்ணே

லக்ஸ்பிறே இல்லையடா
அரவிந்தா கண்மணியே
ஆமி அடித்ததென்று சொல்லியழு
சீனியில்லை ரீயும்தர
லக்ஸ்பிறே இல்லையடா

சீனி மா வாங்கியேதான்
சிரம் மூடி வந்தவரோ

உன்னப்பா திரும்புகையில்
கரம்கட்டி சுட்டுவிட்டார்


நெல்லறுக்கச்சென்ற
சூடடிகும் வேளையிலே

உன்னம்மா நல்லம்மா
செல்லடியில் தானிறந்தாள்

அனாதையென்று ஏங்காதே
குண்டுடச்சத்தம்
காதிரண்டும் நீ பொத்தி

அவனியிலுன்போல் பலருண்டு
எங்கும் கேட்குதடாக
கண்மணியே கண்வளராய்

1972ம் ஆண்டில் கலகலப்புபத்திரிகையில் வந்த நகைச்சுவைக்கவிதையை உலகர் இன்றைய நிலமையையும் கலந்து பார்த்தார்.




அன்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியில் அரிசி சீனி மா தட்டுப்பாடு, பால்மா தட்டுப்பாடு, சீனி மாவுக்குத்தட்பாடிருந்தது. ஆனால் சினிமாவுக்கு எந்தக்கட்டுப்பாடுமிருக்கவில்லை. உலகர் தாமோதரம் கோஸ்டி படிக்கும் நேரத்தில் எத்தனை படம் பாத்தாரென்று ராசம்மாவுக்குத்தான் தெரியும்.



இந்த நேரம் ரூபி வெளியே வரும்போது நீ சிரித்தால் தீபாவலி என்று பாடிக்கொண்டு வர ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் சிரிக்க ராசம்மா வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டா என்ன இருந்தாலும் மருமகளல்லவா.

ல கரம் ழ கரம் ரகரம் றகரம் தெரிந்தும் பலரிருக்கும்போது தினமும் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, மேடைகள் சம்பாசனைகளில் நடக்கும் தமிழ்கொலை ஒன்றா இரண்டா!

பலாலி கிளாலி காரைக்காலை ஆங்கிலத்தில் பார்த்து கரைக்காலென்றும் நிலா வெளியை நில்லா வெளியென்றும். வாசித்தும் கேட்டும் மக்கள் பழகி விட்டார்கள்.



நீ சிரித்தால் தீபாவளி. வாராவாரம் அதிரடி, செல்லடி, மலிவு விற்பனை.

ஆட்டிலறி அன்னம்மா தொடங்கினா. உலகண்ணை ஒவ்வொருகிழமையும் அதிரடி ஆட்டிலறி மலிவு விற்பனை படங்களின் பெயர்கலெல்லாம் சாறியளுக்கு. ஓம் அன்னம்மாக்கா.

சந்திரமுகி சாறி, அந்நியன் சாறி, அந்நியன் சாறி மனைவி கட்டலாமா? போய் சாறி அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது என புதுப்படங்களின் பெயர்களை அடுக்கிக்கொண்டுபோனா ஆட்டிலறி அன்னம்மா.

வாரா வார மலிவு விற்பனையில் வாங்கி அடுக்கினால் நீ சிரித்தால் தீபாவளி கிறடிட்காட் பில் வரும்பொழுது?. ரத்தக்கண்ணீர் விடும்பொழுதுதான் தெரியுமெண்டு உறைப்பாக சொல்லிமுடித்தா ஆட்டிலறி அன்னம்மா. ரூபி கடைக்கண்ணால் ராசம்மாவை....

வேள்வி, தீபாவளி, நத்தார், றம்ழான் வருடத்தில் ஒருமுறைதான். ஆனால் தினமும் சொப்பிங். ஆறு நாளும் ஆட்டுக்கறி எண்ணையும் வெண்ணையும் கலந்து கலகலப்பான சாப்பாடு.




# தமிழ் திரையுலகின் புதிய தலைமுறை நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் - ஜான் மகேந்திரன்

## நேர்காணல்:இயக்குநர் ஜான் மகேந்திரன்

நடிகர் விஜய் நடித்த "சச்சின்" படத்தையும் ஒரு கன்னடப் படத்தையும் இயக்கியுள்ளார். அடுத்ததாக, "உறுமி" என்ற புதியத் திரைப்படத்தை இயக்கும் திட்டத்தில் அடிப்படை வேலைகளைச் செய்துகொண்டிருக்கும் போதுதான், அந்த மிக அரிய அந்த வாய்ப்பு இவர் முன் வந்து நின்றது. ஈழத்தமிழர்களின் அவல வாழ்வைப் பதிவு செய்யும் "ஆணிவேர்" என்ற திரைப்படத்தை இயக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. தமிழீழத்தின் முதல் திரைப்படம் இது. இன்று இந்தத் திரைப்படம் லண்டன், கனடா, ஆஸ்திரேலியா உட்பட புலம்பெயர் தமிழர்கள் வசிக்கும் எல்லா நாடுகளிலும் திரையிடப்பட்டு அனைவரின் ஏகோபித்த பாராட்டையும் பெற்றுள்ளது. அடுத்தடுத்த மாதங்களில் சுவிட்சர்லாந்து, நார்வே உட்பட பல நாடுகளில் திரையிடப்பட இருக்கிறது. இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் திரையிட ஏற்பாடுகள் தீவிரமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இயக்குனர் ஜான் மகேந்திரனை "விளம்பரம்" இதழுக்காக சென்னையில் இருக்கும் அவரது இல்லத்தில் சந்தித்தோம். வீட்டுக்குள் நுழைந்ததும் வரவேற்று, பேசிக்கொண்டிருந்த இயக்குனர் மகேந்திரன், நேர்காணல் தொடங்கியதும், எழுந்து அவரது அறைக்குச் சென்றார். இனி நேர்காணல்.

### சந்திப்பு: சிவதாணு

கேள்வி: தமிழீழத்தின் திரையுலகப் பயணத்தைத் தொடங்கி வைக்கும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ளீர்கள். படமும் பரவலாக அனைவரின் ஏகோபித்த ஆதரவையும் பெற்றுள்ளது. வாழ்த்துகள்.

ஜான் : நன்றி.

கேள்வி: திரைப்படத்துக்கு "ஆணிவேர்" என்று தலைப்பு வைக்க என்ன காரணம்?



ஜான்: ஈழத் தமிழர்களுடைய உண்மையான நிலையை, அவல வாழ்வைப் படமாக்கப் போகிறோம். வழக்கமான திரைப்படமாக இல்லாமல் வரலாற்றின் பக்கங்களில் குறிப்பிடப்படப் போகிற படம் இது. எனவே தலைப்பு தொடங்கி, படம் முடியும் வரைக்கும் மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று முடிவுசெய்து, தலைப்புக்காக ஆலோசித்துக் கொண்டிருக்கும் போதுதான் கவிஞர் காசி ஆனந்தன் இந்தத் தலைப்பைச் சொன்னார். புயல் வந்து மரமே விழுந்தாலும் அதன் ஆணிவேர் இருந்துகொண்டே இருக்கும். அதிலிருந்து மறுபடியும் மரம் துளிர்க்கும். அதுபோல்தான் ஈழத் தமிழர்கள் வாழ்வும். தமிழ் சமூகத்தை எப்போதும், எவராலும் அழிக்க முடியாது.

கேள்வி: "ஆணிவேர்" கதை என்ன?

ஜான்: முழுக்க முழுக்க ஈழத் தமிர்களின் வாழ்வுதான் திரைப்படம். அவர்களது வாழ்வில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், வேதனைகள் மற்றும் ஊடகங்களால் மறைக்கப்பட்ட உண்மைகளைப் படமாக்கியுள்ளோம். ஈழத் தமிழர்களுக்கு இது காட்டும் உலகம் புதிதல்ல, ஆனால், மற்றவர்களுக்கு இப்படியெல்லாம் அவர்களது வாழ்வில் நடந்துள்ளதா என்று கசிந்துருக வைக்கும் ஓர் உலகம் இப்படத்தில் இருக்கிறது. நிச்சயம் அவர்கள் ஆச்சரியம் கொள்வார்கள். நாங்கள் எங்கேயும் பொய் சொல்லவில்லை, திரைப படத்துக்காக சம்பவங்களை மிகைப்படுத்த வில்லை, உணர்ச்சியை கூட்டவில்லை. பொதுவாக அழகானதும் கம்பீரமானதுமான இலங்கைத் தமிழை கொச்சைப்படுத்தும் போக்கு தமிழ் சினிமாவுக்குள் இருக்கிறது. இந்தப் படம் அதற்கும் சாட்டையடி கொடுக்கும். இப்படத்தை சிங்களவர்கள் பார்க்கவேண்டும், அவர்கள் தமிழர்களுக்கு இழைத்திருக்கும் கொடூரங்களை உணரவேண்டும் என்பது இப்போதைய என் விருப்பம்.

கேள்வி: இந்தப் படத்துக்கான நடிகர்களை எப்படித் தேர்வு செய்தீர்கள்?

ஜான்: நாம் வாழும் காலத்தில் ஒரு சமூகத்துக்கு நடந்த, அதுவும் நம்முடன் தொப்புள் கொடி உறவுடைய நமது சகோதர, சகோதரிகளுக்கு நிகழ்ந்த கொடுமையான ஒரு நிகழ்வை படமாக்கப் போகிறோம். எந்த வகையிலும் இம்முயற்சி மற்ற கேளிக்கை சினிமாக்கள் போல் ஆகிவிடக்கூடாது என்னும் பொறுப்புடன்தான் நடிகர்களையும் தேர்வுசெய்தோம். படத்தைப் பார்ப்பவர்கள் இது சினிமா என உணரக்கூடாது என நான் நினைத்தேன். அதன் அடிப்படையில்தான் எங்கள் நடிகர்கள் தேர்வு அமைந்தது. நான் இப்படியொரு படத்தை இயக்கப் போகிறேன் என்று அறிந்ததும், தானாகவே என்னை அணுகிய நடிகர் நந்தா, "ஜான் எனக்கு மிகப் பெருமையாக உள்ளது. நீங்கள் ஏற்றிருக்கும் பொறுப்பு மிகப்பெரியது. வரலாற்றில் உங்கள் பெயர் நிலைத்திருக்கும்படி இதனைச் செய்யுங்கள். நானும் இந்தப் பெரிய பணியில் உங்களுக்கு துணை நிற்க ஆசைப்படுகிறேன். ஒரு துணை நடிகர் வாய்ப்பாவது இதில் எனக்கு நீங்கள் தரவேண்டும்" என்றார். அவரது ஆர்வம் எங்களை நெகிழச் செய்தது. இப்படியொரு உணர்வுடைய நடிகர் நடிப்பதுதான் சரியாக இருக்கும் என்று அப்போதே அவரை கதாநாயகனாக முடிவு செய்தோம். ஆனால், நடிகை மதுமிதா ஈழத்தமிழர்களின் ஆழமான வலி தெரியாதவர். ஆனாலும் எங்களை அவர் ஏமாற்றவில்லை. மிக நன்றாக, அவரால் இயன்ற அதிகபட்ச நடிப்பை, உணர்வுபூர்வமாக இதில் அவர் தந்துள்ளார்.

கேள்வி: படத்தின் தயாரிப்பாளர் பெயர் பிரபாகரன் என்று உள்ளது. இவர் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனா?

ஜான்: நிறைய பேர் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு. "ஆணிவேர்"



படத்தின் தயாரிப்பாளர் பிரபாகரன், பத்தொன்பது வருடங்களுக்கு முன் ஈழத்தைவிட்டு அகதியாக ஆஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்தவர். "சச்சின்" படப்பிடிப்பு வேலைகள் நடந்துகொண்டிருக்கும் போது இவரது அறிமுகம் எனக்குக் கிடைத்தது. "எங்களோட நாட்டுக்கு ஒரு திரைப்படம் எடுத்துக் கொடுங்கள்" என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். வியாபார நோக்கம் இல்லாமல், உண்மையிலேயே ஈழத்தமிழர்களின் வலி பதிவுசெய்யப்பட வேண்டும் என்றார். இப்படியொரு தயாரிப்பாளருக்காகத்தானே அவ்வளவு சினிமா கலைஞனும் காத்திருக்கிறான். இந்தப் படம் இயக்கத்தை நியாயப்படுத்த எடுக்கப்பட்ட தில்லை. ஈழத்தமிழர்களின் உண்மையான வலியையும் அவர்கள் வாழ்வில் எதிர்கொண்ட கோடூரங்களையும் பதிவுசெய்யும் நோக்கில் எடுக்கப்பட்டது.

கேள்வி: படத்தின் மிகப்பெரிய பலமாக நீங்கள் கருதும் காட்சி அல்லது கூறு என்ன?

ஜான்: ஒளிப்பதிவுதான். 85ஆம் ஆண்டு தமிழர்கள் புலம்பெயர்ந்த காட்சியைப் பார்த்துவிட்டு, லண்டனிலிருந்து ஒரு பெரியவர் அக்காட்சி அன்றைய காலகட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட வீடியோ பதிவுகளின் கோப்புக் காட்சிகளா என்று கேட்டார். என் தந்தை மகேந்திரனும் இதே கேள்வியைக் கேட்டார். அந்த அளவுக்கு ஒளிப்பதிவாளர் சஞ்சய் திறமையாக அக்காட்சியைக் கையாண்டுள்ளார்.

கேள்வி: "சயனைட்" கன்னடப் படம் பார்த்தீர்களா?

ஜான்: இன்னும் பார்க்கவில்லை. ஆனால், கேள்விப்பட்டேன்.

கேள்வி: மகேந்திரனின் "முள்ளும் மலரும்" வெளிவந்தப் பிறகுதான் தமிழ் திரைப்படத்தின் உள்ளடக்கத்திலும் அழகுணர்ச்சியிலும் பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தது. ஆனால், அப்படியொரு கலைஞனுக்கு மகனாகப் பிறந்த நீங்கள் உங்கள் முதல் படமான "சச்சின்" அப்படியொரு மாற்றத்தைக் கொடுக்கத் தவறியது வரலாற்று பிழை இல்லையா?

ஜான்: நான், இயக்குனர் மகேந்திரனுக்கு மகனாகப் பிறந்ததே பெருமை என்று கருதுகிறவன். மகேந்திரன் மாதிரியான மேதைகள், அதுவும் வியாபாரம் தமிழ் சினிமாவைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் சூழலில், ஒரு சிலர்தான் பிறக்க முடியும். ஆனால், "ஆணிவேர்" படத்தின் மூலம் அவர் பெயரைக் காப்பாற்றும் காரியத்தை நான் செய்திருக்கிறேன்.

---

## நீ செய்யவேண்டியது

பிரபஞ்ச விசாலத்தின் நீள அகலத்தை
அறிவுத்தேடலின் எல்லையை
பெண் ஆண் சமத்துவத்தின் மையப்
புள்ளியை
மனித ஆசையின் எடையை
நீதி என்னும் சொல்லின் பொருளை
உலக சமாதானத்தின்
கட்டுக்களை அவிழ்க்கும் உத்தியை
ஜனநாயகக் கிணற்றுக்குள்
ஒடுக்கப்பட்டோரும்
பெண்களும் மூழ்கி இருக்கும் காரணத்தை
வறியோரின் காடுகளில் வல்லமையாளர்
ஏன் புறாச் சுட்டு விளையாடுகின்றனர்,
தீயினாலும் எரிக்க முடியாத சாதியை
முற்றாக எவ்வாறு அழிக்கலாம்
கடன் இல்லாமல் எப்படி
வாழ்க்கையை நடத்தலாம்

திடீரெனக் கட்டறுந்து போகும்
வாழ்க்கைத் துணையை, பிள்ளையை
அண்ணன் தங்கை உறவை வாழ்ந்த
வீட்டை
எவ்வாறு உத்தரவாதப் படுத்தலாம்,
மதப்பிரிவுச் சண்டையை
உழைப்போர் உலகின் வறுமையை
எப்படி நிவர்த்தி செய்யலாம்,
என்பனவற்றைத்
தேடுவது



முத்துராஜா



## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

Professional Photographer - கதிர்

416-750-8118

2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough



# வணிகம்

## வியாபாரக் கைநூல் 2007

## 11வது பதிப்பு




தமிழர்களின் வணிகத்துறையை மென்மேலும் வளர்ச்சியுறச் செய்யும் நோக்குடன் தமிழர் வணிக விளம்பரங்களை மட்டுமே தாங்கிவரும் வியாபாரக் கைநூலின் 11ம் பதிப்பு எதிர்வரும் ஜனவரி 2007இல் வெளிவரவுள்ளது.

எனவே தங்களின் வியாபார விளம்பரங்களும் இக்கைநூலில் இடம்பெற இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட வர்ண விளம்பரங்களும் இடம்பெற இருப்பதால் தங்கள் விளம்பரங்களுக்கு முந்துங்கள்

**விளம்பரங்கள் கையேற்பதற்கு இறுதித்திகதி 15/11/2006**

**VANIKAM CHAMBER OF COMMERCE**

39 Cosentino Drive,
Scarborough, ON
M1P 3A3

**Tel: 416.335.0622 ex: 12**
**Fax: 416.335.0112**

vanikamdirectory@gmail.com

அதிக பிரதிகளுடன் வெளிவரும் வியாபாரக் கைநூல்

# வரலாற்று பெருமைமிக்க இரு நூலகங்கள்

தென்கிழக்கு ஆசியாவில் அதி சிறந்த நூலகங்களுள் ஒன்று என்ற பெருமையோடு விளங்கிய யாழ்ப்பாணப்பொதுசனநூலகம் தீக்கிரையாக்கப்பட்டு 25வது ஆண்டினை நினைவுகூர்ந்தும் புலம்பெயர்வாழ் ஈழத்தமிழர்கள் மிக அதிகமாக வாழும் கனடிய மண்ணில் உலகத் தமிழர் சமூக நூலகம் நிறுவப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டும் நூலகம் நிறுவப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டும் இக்கட்டிரை பிரசுரமாகிறது.

01ஆம் பக்கத் தொடர்ச்சி

*பொதுசன நூலகம் என்ற பெயரோடு முதன் முதலாக யாழ்ப்பாணத்தில் ஆரம்பிகப்பட்ட நூலகம் இன்றுவரை தொடர்ந்து நிலைத்திருந்தால் அதற்கு வயது 164 ஆகும். 1842 ஆம் ஆண்டு எவ்.சி. கிறினியர் என்னும் பெரியாரால் முதன்முதல் ஒரு நூலகம் அமைக்கப்பட்டது. அது படித்தவர்களுக்கும் உயர் தொழில் புரிபவர்களுக்கும் மாத்திரம் பயன்படும் வகையில் அமைந்தமையால் காலப்போக்கில் செயலிழந்து போயிற்று.*

*1933 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த த.மு. செல்லப்பா அவர்களின் வீட்டில் இயங்கி வந்த வீட்டு நூலகத்தின் தோற்றத்துடன் தற்போதைய யாழ். பொதுசன நூலகத்தின் தற்கால வரலாறு ஆரம்பமாகிறது. வீட்டு நூலகத்தினை நடத்தி வந்த க.மு. செல்லப்பா யாழ்ப்பாணத்திற்கோர் மத்திய இலவச நூலகம் உருவாக வேண்டும் என விரும்பினார். அதற்காக படித்தவர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள், உயர் தொழில்புரிவோர், வர்த்தகப் பிரமுகர்கள், இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப்பெரியோர்கள் எனப் பலரையும் அணுகி அயராது செயற்பட்டதனையடுத்து 1934ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்தில் நூலக சபை ஒன்றினை உருவாக்குவதற்கான பொதுக் கூட்டம் நடைபெற்றது.*

*நூலக சபையும் தெரிவு செய்யப்பட்டது. தலைவரான மாவட்ட நீதிபதி சி. குமாரசாமி உபதலைவராக வணக்கத்திற்குரிய கலாநிதி ரி. ஐசாத் தம்பையா இணைச் செயலாளர் கலிகை சி. பொன்னம்பலம், க. மு. செல்லப்பா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபையில் அப்போதைய வடமாநிலக் கல்வியதிகாரி அருணந்தி உட்படப் பல பாட-சாலை அதிபர்கள், உப அதிபர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் எனப் பலரும் இடம்பெற்றிருந்தனர். இந்த நூலகக் குழுவின் அயராத முயற்சியினால் பல நூல்களும், சஞ்சிகைகளும் ஓரளவு நிதியும் சேகரிக்கப்பட்டு 1934 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள ஒரு வாடகை அறையில் நூலகம் உருவாகியது. இந்த நூலகம் மேலும் வளர்ச்சி பெறவும் பொதுமக்கள் தயக்கமின்றி சுதந்திரமாக நூல்களைப் பாவித்துப் பயன் பெறவும் வேண்டுமாயின் அது ஒரு பொது அமைப்பின் மேற்பார்வையில் செயல்பட வேண்டும் எனக்கருதிய நூலகக் குழுவினர் அதனை யாழ்ப்பாண நகர சபையிடம் ஒப்படைப்பதே சிறந்தது எனத் தீர்மானித்தனர். அதற்கான*



யாழ். நூலகத்தின் அன்றைய தோற்றம்

*பூர்வாங்க முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அப்போது பொறுப்பு வாய்ந்த பல சட்டத்தரணிகள் நகரசபை அங்கத்தவர்களாகவும் இருந்தனர். அதன் காரணமாக இம்முயற்சி இலகுவில் பயனளித்தது.*

*01.01.1935 ஆம் ஆண்டு முதல் நூலகத்தை யாழ்ப்பாண நகரசபை பொறுப்பேற்க இணக்கம் தெரிவித்தது. அப்போது யாழ்ப்பாண நகரசபை தனக்கென ஒரு கட்டிடமோ, காணியோ இல்லாது யாழ். செயலகத்தின் ஒரு பிரிவில் செயற்பட்டு வந்தது. இவ்வாறான இட நெருக்கடியினால் நகர சபையினர் வேறு இடம் தேடி யாழ். பிரதான வீதியிலிருந்து அபூபக்கர் கட்டிடத்தின் ஒரு பகுதியை வாடகைக்கு பெற்று நூலகத்தை அங்கு நிறுவினர். இவ்விடம் வசதியாக இருந்த போதிலும். நூலகத்திற்கேற்ற அமைதியான சுற்றுப்புறச் சூழல் அமையவில்லை.*

*எனவே மீண்டும் பொருத்தமான இடமொன்றினைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை நகரசபைக்கு உருவாகியது. கடும் முயற்சியின் பின்னர் யாழ்ப்பாணம் வாடி வீட்டுக்கு தென் திசையில் இருந்த மாடிக் கட்டடத்தின் மேல் மண்டபத்தினை புத்தூர் மழவராயர் குடும்பத்தாரிடமிருந்து வாடகைக்குப் பெற்றுக் கொண்டது. இம் மண்டபத்தில் நூலகம் செயற்படத் தொடங்கியதும் நூல் இரவல் வழங்கும் முறையும் ஆரம்பமாகிறது.*

*வணக்கத்திற்குரிய கலாநிதி ஐசாக் தம்பையா அவர்களின் நூல் தொகுதி உட்படப் பல கல்விமான்களினதும் அறிஞர்களினதும் நூல் தொகுதிகள் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கிடைத்தன. நூல்களின் எண்ணிக்கையும் வாசகர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்க நூலகத்திற்கென தனியான கட்டடம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் உருவாகியது.*

*நீண்ட காலமாக கொழும்பு, கண்டி, காலி ஆகிய நகரங்களே மாநகர சபைகளாக விளங்கின. 1949 ஆம் ஆண்டில் தான் யாழ்ப்பாணம் மாநகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டது. இக்கால கட்டடத்தில் மாநகர சபைத் தலைவராகப் பணியாற்றிய சாம் ஏ. சபாபதி நூலகத்தின் வளர்ச்சியில் மிக்க ஆர்வமும் அக்கறையும் கொண்டவர்.*

*யாழ்ப்பாண நூலகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சி இவரது பதவிக் காலத்துடனேயே ஆரம்பித்தது எனக் கூறுதல் சாலப் பொருந்தும். நூலகத்தின் வளர்ச்சிக்காக யாழ்ப்பாண மத்திய நூலக சபையினை உருவாக்கி அதன் தலைமைப் பொறுப்பினையும் அவர் ஏற்றுக் கொண்டார். அச் சபையின் உப தலைவர் பொறுப்பினை அப்போதைய யாழ். சென். பற்றிக் கல்லூரி அதிபர் வணக்கத்திற்குரிய லோங் அடிகளார் ஏற்றுக் கொண்டார். அப்போதே அவர் "நாங்கள் அமைக்கப்போகும் நூலகம் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு ஒளியூட்டும் தரமுள்ளதாக அமையும்" எனக் கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது.*

*இவர்களுக்கு உறுதுணையாக யாழ்ப்பாண செயலகத்தின் செயலாளராக ரி. முருகேசம்பிள்ளை பணியாற்றியமை பெரும் வரப்பிரசாதமாயிற்று.*

**வே. விவேகானந்தன்**
**கனடா**

*இவர்களின் அரும்பெரும் முயற்சியினால் டில்லி பல்கலைக்கழக நூலகமும் பேராசிரியருமான எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களின் திட்டமிடலில் நூலக கட்டிடக் கலை நிபுணர் சி. கே. நரசிம்மனால் மாதிரி நூலக கட்டட வரைபடம் தயாரிக்கப்பட்டது.*

*நூலகம் அமைவதற்குப் பொருத்தமான இடமொன்றினைத் தெரிவு செய்வதற்காக நகர நிர்மாண உத்தியோகத்தராகக் கொழும்பில் பணியாற்றிய வீரசிங்க யாழ். நகரில் பல்வேறு இடங்களையும் பார்வையிட்டு இறுதியில் நூலகம் நகரின் மத்தியில் அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டு முனியப்பர் கோயிலுக்குக் கிழக்கே இருந்த முற்ற வெளியைப் பொருத்தமான இடமாகத் தெரிவு செய்தார்.*

தொடரும்

# எனது நாடக...

22ஆம் பக்கத் தொடர்ச்சி

இருக்கலாம்! எங்களைப் போன்ற புத்திஜீவிகளை ஒன்றும் செய்ய முடியாது! அது உனக்கே நன்கு தெரியும்! அதுதான் முன்னுக்கு வந்தவர்களைச் சாதுரியமாகத் திருப்பி அனுப்பிவிட்டாய்!' என்று நான் சொன்னதும் சபையில் பலத்த கரகோசம்!

மந்திரவாதிக்குக் கோபம் அதிகமாகி 'அடா! யாது சொன்னாய் பாதகா? பார்! உன்னை என்ன செய்கிறேன் என்று பார்! என் சக்தியைப் பார்! ஆத்தா! ஆத்தா!' என்று கர்ச்சித்தவாறு எனக்குக் கிட்ட வந்து தன் பையிலிருந்து வீபூதியை அள்ளி என் முகத்தில் வீசி, குழையால் அடித்து மந்திரங்களைச் செபித்தார்!

நான் உருக்கொண்டு ஆடினேன். இது ஒன்றும் எனக்குப் புதிதல்ல. முன்பு சின்ன வயதில் என் தம்பி அடித்த மேளத்துக்கு ஆடினேன். இப்பொழுது இவர் சொல்லும் மந்திரத்துக்குத் தக்க ஆடினேன்.

பின்னர் மயங்கிச் சரிந்தேன். (இக் கட்டத்தில் நான் சாதாரண பார்வையாளனாக மேடையேற வில்லை என்பது அவையினருக்குப் புரிந்திருக்கும்.) மந்திரவாதி என்னைத் தாங்கி இழுத்துக் கொண்டு அரங்கின் நடுவில் இருந்த கதிரையில் இருத்தினார். அதன்பின் அவர் சபையில் இறங்கிப் பொருட்களைச் சேகரித்துக் கொண்டு அரங்கில் ஏறி, முன்னர் திட்டமிட்ட ஒழுங்கில் அவற்றைக் காட்ட, நான் பெயர்களைக் கூறினேன்.

மந்திரவாதி இடையிடையே 'பார்த்தீர்களா! பார்த்தீர்களா!' என்று தனது சக்தியைப் பற்றிப் பீடிகை செய்த வண்ணம் இருந்தார்.

பின்னர் 'இப்பொழுது சொல்லுங்கள், இந்த ஆளை மயக்கத்திலிருந்து எழுப்பவா?' என்று மந்திரவாதி அவையைப் பார்த்துக் கேட்க, 'எழுப்பு! எழுப்பு!' என்று குரல்கள் எழுந்தன. ஒரு சிலர் 'வேண்டாம்! எழுப்பாதே!' என்றும் கத்தினார்கள்.

உடனே மந்திரவாதி 'ஆம். நீங்கள் சொல்வதுதான் சரி. இவன் ஒரு நாத்திகன், சமயத் துரோகி! இவனை எழுப்பாமல் விடுவதுதான் நல்லது. ஆனாலும், என் ஆத்தாள் இவனில் இருக்கிறாள். அவளை நான் அழைத்துக் கொண்டு போகவேணுமே, என்ன செய்வது' என்று சொல்லி எனக்குக் கிட்ட வந்து மந்திரங்களைச் சொல்லித் தண்ணீரை முகத்தில் அடிக்க, நான் மெதுவாக அசைவுகளைக் காட்டி எழுந்து வியப்புற்று நின்றேன். அவ்வளவில் அறிவிப்பாளர் மேடைக்கு வந்து நடிகர்களின் பெயர்களைச் சொல்லி - பழைய செலையூர்வாசிகள் என்றதும் ஏகோபித்த கரகோசம் ஆகாயத்தை அலைத்தது! இந்த நாடகம் அவையோரை நன்கு மகிழ்வித்தது. எமக்கும் அதிக மனநிறைவைத் தந்தது. நாம் இருவரும் சேர்ந்து நடித்த நாடகங்களில் இது பெரிதும் வித்தியாசமானது.

## ஆரோக்கிய வாழ்வை நோக்கி ஒரு பயணம்

வசந்தத்தின் வருடாந்த கருத்தரங்கு வரிசையில், இவ்வருடம் தமிழ் சமூகமும் உளநலமும் விடயத்தில் ஆரோக்கிய வாழ்வை நோக்கி ஒரு பயணம் எனும் தலைப்பில் ஒரு நாள் விளிப்பூட்டல் கருத்தரங்கை நடத்த வசந்தம் தமிழ் முதியோர் உளவளத்துணை நிலையம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.
தமிழ் சமூகத்தின் எல்லாத் தலைமுறையினருக்கும் ஏற்ற வகையில் பல்துறை ஆய்வறிவாளர்கள் கருத்துரையாற்றும் தினநிகழ்வு இது.

இடம்:- ஸ்காபரோ சிவிக் சென்ரர்     திகதி:- 2006 ஐப்பசி 21 சனிக்கிழமை
நேரம்:- காலை 9.30 - மாலை 3.00

கலந்துரையாடப்படும் விடயங்கள்
- மகப்பேறுகாலத்தின் பின்னரான மனவிரக்தி
- தற்கொலையும் அதனோடு தொடர்புடைய மனப்பிறழ்வும்
- கோபத்தையும் ஆத்திரத்தையும் வழிப்படுத்தல்
- இளைஞர்களிடையேயான வன்முறைகள்
- தமிழ் சமூகத்திலே நிலவுகின்ற குடும்ப வன்முறைகள்

வழமை போல் பல்வேறு இடங்களில் இருந்து போக்குவரத்திற்காக பேரூந்து வசதிகள் எற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இலவச சிறுவர் பராமரிப்பு முற்பதிவின் அடிப்படையில் வழங்கப்படும். காலை உணவு, மதிய உணவு வழங்கப்படும்.
மேலதிக தகவலுக்கும் பதிவுகளுக்கும் 416 324 4185 எனும் இலக்கத்தில் சேரரவையும் றாஜினியையும் வசந்தத்தில் அழையுங்கள்.

அனைத்தும் இலவசம்! அனைத்தும் பிரயோசனம்! அனைத்தும் ஆரோக்கியம்!



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

## Answers - 191 October 01, 06

1) Joel' phone rings for 5 x3 = 15 seconds. there are four periods of silence. This takes 4 x2 = 8 sec. From the start of the 1st ring until the end of the 5th ring takes 15 + 8 = 23 seconds.

2) John will be 10 years old in 3 years, so he is now 7. Mary is 2 years younger than John. so she is now 5 years old.

3) All 20 frames need at least 2 wheels. This uses up 40 wheels with 8 left over. Since the 8 must be used, they would go on tricycles, making 8 tricycles and 12 bicycles.

4) The prime factorization of 1998= $2 \times 3^3 \times 37$.
Thus p, q, & r have values 2,3 and 37 and p + q + r = 42.

5) To probe $(\cos 2x + \sin 2x - 1)/(\cos 2x - \sin 2x + 1) = \tan x$
I.H.S. = $[(1 - 2\sin^2 x) + 2\sin x \cos x - 1] / [(2\cos^2 x - 1) - 2\sin x \cos x + 1]$
= $2\sin x(\cos x - \sin x / 2\cos x(\cos x - \sin x)$ = tanx

## Tutorial - 192 October 15, 06

1 When the hour hand of a circular clock goes around once, how many times the minute hand goes around. [Gr. 4]

2. I am 10 years older than my brother. Ten years ago, he was 10. How old will I be in 10 years. [Gr.4 - 6]

3. Each edge of a blue cube is 2 cm long. A red cube has half the surface area of the blue cube. How long in cm is each edge of the red cube. (Gr. 8)

4.The number of solutions (x,y) of the equation 3 x + y = 100, where x and y are positive integers is (A) 33 (B) 35 (C) 1,000 (D) 101 (E) 97 [For Gr.10 & 11)

5. Prove that $\tan^6 x = \tan^4 x \sec^2 x - \tan^2 x \sec^2 x + \sec^2 x - 1$ (For Gr. 12)

**BY. MR. S.F.XAVIER (Teacher) TEL: 416-431-6774**


## MATH, SCIENCE & ENGLISH TUITION

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 2 to 12 & OAC Special classes in Calculus & Algebra - Geometry English for all grades from Gr. 2 ta Gr. 10
Individual & group classes available By an experience teacher: S.F. Xavier

CONTACT: 416 - 431- 6774 (Markham & Ellesmere)

## TUITION CLASSES



**Chemistry, Biology Math, Science**

From Grade 11 & 12 From Grade 5 to 10
Test Preparation
Review Questions / Answers Based on Ontario Curriculum
McCowan & Finch மேலும் விபரங்களுக்கு 416-335-9779


## TUITION CLASSES



**SHEPPARD / MEADOWVALE** பகுதியில்
**Kindergarten - Grade 5** வரையும் கல்விகற்கும் மாணவர்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியையினால் கல்வி கற்றுக்கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 416-724-2819

## TUITION CLASSES



**BIRCHMOUNT / SHEPPARD**
**Grade 9 - Grade 12**
Math, Science, Calculus, Algebra, Geometry, Physics, Chemistry
**Fees - Gr. 9 & Gr. 10 - $40/Month**
**Gr. 11 & Gr. 12 - $50/Month**
**For more information Kula, B.Sc. SriLanka, B.Eng. Canada**
416.850.9397 /416.317.9413


# 'சக்தி' - உளஉடல் நல மற்றும் வாழ்வியல் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் மையம்

கனடா வாழ் நம்மவரிடையே உணவு முறைகள், குடும்ப வன்முறை, சமூக வன்முறை எல்லாமே சராசரி கனேடிய குடிமகனிலும் வேறு பட்டு உள்ளதோடு மாத்திரமல்லாமல் எமது இனத்தினது கௌரவம் தாழ்வதற்கும் காரணமாக அமைகின்றன என்பதை எண்ணுகையில் மனதில் ஓர் ஏக்க உணர்வு ஏற்படவே செய்கிறது. இது, இன்று நேற்றல்ல எம்மவர்கள் திரளாகப் புலம்பெயரத் தொடங்கிய 80களிலேயே பலர் உணரத் தொடங்கிய போதிலும் இதனைப் போக்குதற்கான மார்க்கம் யாது என எண்ணி ஏக்கத்தில் திகைத்ததுண்டு. சில முயற்சிகள் இயக்க ரீதியாக மேற்கொள்ளப்பட்டன என்பது உண்மையே. "Can Tyd" எனும் இளைஞர் அமைப்பு, 'வசந்தம்' வயதானோருக்கான அமைப்பு போன்றவை கை கொடுத்தாலும் எமது முழுமையான தேவைக்கு இவைகளால் மாத்திரம் ஈடு கொடுக்க முடியாது போனமை வருத்தத்துக்குரியது.

இங்கு வாழும் எமது சமூகம் இருதலைக்கொள்ளி எறும்பாகவே வாழ்ந்து வந்துள்ளது, வாழ்ந்து வருகிறது. தாயகத்தின் மீட்பு, எமது உடன் பிறப்புக்களின் புனர்வாழ்வு என ஒருபுறமும் இங்கு புலம் பெயர்ந்தோரினது குடி அமர்வு, நல்வாழ்வு என மறுபுறமும் நமது செயல்களும் சிந்னைகளும் அல்லாடுகின்றன. இதனால் புலம் பெயர்ந்த மற்றைய சமூகங்களுக்கில்லாத அவலம் எமது சமூகத்திற்கு அதிகம் எனலாம். ஏனைய சமூகத்தவர் போலல்லாமல் குடி அமர்வு விடயங்களில் நாம் நிறையவே பின்தங்கிவிட்டோம் என்பதைக் கூறியே தீர வேண்டும். இன்னும் சொல்லப் போனால் ஏனைய சமூகங்களைப் போலல்லாது தாயகத்தில் இருந்து புலம் பெயர்ந்த பலர் அங்கே ஏற்பட்ட பற்பல அரசு பயங்கரவாத வன்முறைகளால், கட்டாய இடப் பெயர்வால், திட்டமிடாத புலம் பெயர்வால் மன அழுத்தங்களுடன் தான் இங்கு காலடி எடுத்து வைத்துள்ளனர்.

## - கனக்ஸ் -

அவர்கள் இங்கு வந்ததும் அந்தப் பாரிய மன அழுத்தத்தைப் போக்குதற்கு வேண்டிய வழிகாட்டல் ஆலோசனை (Counseling) அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். அது நடக்கவில்லை. அவலங்களில் இருந்து தப்பினோம் என வந்தவர்கள் இங்கு வந்தும், வாழ்வில் வசந்தத்தை யாவரும் கண்டார்களா? பலருக்கு நெருக்கடி வேறொரு வகையாக. எரிகிற தீயினுக்கு எண்ணை ஊற்றியது போல, புலப்பெயர்வால் சிதைவுற்ற குடும்பம், புரியாத கலாசாரம், தெரியாத மொழி, குறையாத துவேச உணர்வு ஆகியவற்றின் விளைவால் மன விரக்தி, மன அழுத்தத்தை உச்சத்துக்கு இட்டுச் சென்றிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா! வீட்டுக்கு வீடு வாசற்படி என்ற நோக்கில் உதாசீனம் செய்யப் பட்டமையால் இவர்களில் அனேகர் அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றனர். இதயமுடியுரு (Coronary) நாடி சம்பந்தமான நோய் மற்றும் மாரடைப்பு நோய்களில் கனடாவைப் பொறுத்தமட்டிலே நாம் தான் முதலிடத்தில் உள்ளோம். சுதேச இந்தியர்களிலும் பார்க்கச் சலரோகம் ஏற்படும் வாய்ப்பில் நாம் முன் நிற்கிறோம். சிறுநீரகம் செயற்படாமையிலும் எமது சமூகத்தவர் இப்போ முன்னிலையில் உள்ளனர். எமது வாழ்வினை அமைதியாக முடிவுக்குக் கொண்டு வரும் பெரும் பணியை மன அழுத்தம் செய்கிறது. மன அழுத்தம் எமது நிர்ப்பீடனத்தொகுதியை ஆட்டம் காண வைக்கிறது, இதய நோயினை ஏற்படுத்துகிறது, உதரசிறுகுடல் பிரச்சனைகளுக்குக் காரணமாகிறது, புற்றுநோயினையும், உளவியல் சார் நோய்களையும் வேகப்படுத்துகிறது. தொழிற் துறையிலும், கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திலும், நாம் ஏனைய கனேடிய சமூகத்தினரிலும் பார்க்க முன்னே நின்றாலும் அவர்களிலும் பார்க்க மன அழுத்தம் சம்பந்தமான நோய்களுக்கு ஆளாகும் தன்மை எம்மிடமே அதிகம் உள்ளது என ஆய்வறிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.'

இவற்றைக் கருத்தில் கொண்டு 'சக்தி' எனும் இலாப நோக்கற்ற உளஉடல் நல மற்றும் வாழ்வியல் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் மையம் ஒன்று வைத்தியர் லம்போதரன் அவர்கள் தலைமையின் கீழ் சென்ற ஞாயிற்றுக் கிழமை (1.10.2006) ஸ்காபரோவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தின் தொடக்கவுரையின் போது வைத்தியர் லம்போதரன் பேசுகையில் 'நம்மில் பெரும்பாலானோர் மன அழுத்தத்துடன் வாழ்கிறோம். அது எமது உடல், உள்ளம் மற்றும் வாழ்வியல் முறைகளை பயங்கரமான முறையில் இசைவிக்கத் தூண்டுகிறது. எமது சமூகத்தில் வன்முறை கட்டுக்கடங்காது போகிறது. வீடுகளிலே நடைபெறும் வன்முறைகள் எமது முகங்களில் கரிபூச வைக்கின்றன' எனக் கூறினார்.

